## மாணவர்

# கட்டுரை
# மலர்

5 ஆம் ஆண்டு
புலமைப் பரிசிற் பரீட்சை
மாணவர்களுக்கும்
6, 7 ஆம் ஆண்டு
மாணவர்களுக்கும்
ஏற்றது.

● சச்சி மாஸ்ரர் ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்
# கட்டுரை மலர்

அமரர், ஆர். வி. எஸ். திருநாவுக்கரசு நினைவு
கல்வி புலமைப் பரிசில் நிதியம், நெடுந்தீவு
EDUCATION SCHOLARSHIP FUND
In Memory of Late
R. V. S. Thirunavukkarasu - Delft

## சச்சி மாஸ்ரர்

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசிற் பரீட்சை
மாணவர்களுக்கும்
6, 7 ஆம் ஆண்டு மாணவர்களுக்கும் ஏற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் கட்டுரை மலர்

வெளியீடு : 1993

ஆக்கம் : சச்சி மாஸ்ரர் ( க. சத்தியானந்தசிவம் )
40, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்,

அச்சுப்பதிவு : அன்னை அச்சகம்
குருநகர்,
யாழ்ப்பாணம்.

பதிப்புரிமை : ஆசிரியருக்கு

விலை : ரூபா 30-00

---

ஆசிரியரின் அடுத்த வெளியீடு

"தமிழ் மருத்துவ அகராதி"

( சித்த ஆயுள்வேத வாகடம் )

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகவுரை

''பழமொழிச் செல்வர்'' சச்சிமாஸ்ரர் எழுதிய 'மாணவர் கட்டுரை மலர்' எனும் இச்சிறு நூல் ஐந்தாம், ஆறாம், ஏழாம் வகுப்பு மாணவர்களுக்கு மிகவும் பயனுடையது. குறிப்பாக ஐந்தாம் வகுப்பு புலமைப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கும் இம்மாணவர்களுக்கு தமிழ் பயிற்றும் ஆசியர்களுக்கும் பயன்தரவல்லது.

இந்நூல் 37 கட்டுரைகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு கட்டுரையும் மேற்படி வகுப்பு மாணவர்களின் கால வயதையும் உள வயதையும் மனதிற்கொண்டு ஆசிரியரால் நன்கு திட்டமிடப்பட்டு எழுதப்பட்டுள்ளது. தமிழ் அறிவும், கற்பித்தல் அனுபவமும் கொண்ட 'சச்சி மாஸ்ரர், ஒவ்வொரு கட்டுரையிலும் மாணவர்களுக்கு ஏற்ற அறிவுரைகளையும், கருத்துக்களையும் தகவல்களையும் இனிய எளிய நடையிற் கூறிச் செல்கின்றார்.

'ஆலயவழிபாடு', 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்', 'சோம்பல் மிகக் கெடுதி', 'காலை எழுந்தவுடன் படிப்பு', 'என் தாய்மொழி', 'பாப்பாவுக்குப் பாட்டுப் பாடிய பாரதி', 'அன்பு', 'அன்னை திரேசா' ஆகிய பல பயனுடைய தலைப்புக்களில் எழுதப்பட்டுள்ள இக்கட்டுரைகள் அனைத்தும் ஆசிரியரின் ஆற்றலைப் புலப்படுத்துகின்றன.

இன்று மாணவர்களிடையே எழுத்துப் பிழைகள், இலக்கணப் பிழைகள் என்பன பெரிதும் மலிந்து காணப்படுகின்றன. இதற்கு வாசிப்புப் பயிற்சியின்மையும் ஒரு காரணமாகும். மாணவர்கள் வாசித்து மொழியறிவை விருத்திசெய்வதற்கும் பெரிதும் துணைபுரியும் நூலாக இது அமைந்துள்ளது.

கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை
சிரேஷ்ட விரிவுரையாளர்
L. I. E. A. S II

ஆசிரிய கலாசாலை,
கோப்பாய்.
23க12-93

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| பாடம் | பக்கம் |
|---|---|
| ஆலய வழிபாடு | 1 |
| உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்... | 2 |
| சோம்பல் மிக்க கெடுதி | 3 |
| காலை எழுந்தவுடன் படிப்பு | 4 |
| சத்துணவு | 5 |
| உழைப்போம் உயர்வோம் | 6 |
| தன் கையே தனக்குதவி | 7 |
| என் தாய் மொழி | 8 |
| வருமுன் காப்போம் | 9 |
| கந்தையானாலும் கசக்கிக் கட்டு | 10 |
| சனசமூக நிலையம் | 11 |
| நானும் ஒரு கிளியானேன் | 12 |
| முக்கனிகளில் முதற்கனி | 13 |
| எனது வகுப்பாசிரியை | 14 |
| பாப்பாவுக்கு பாட்டுப் பாடிய பாரதி | 15 |
| மழை நான் | 16 |
| ஆலமரத்தின் சுயசரிதை | 17 |
| பூக்கள் | 18 |
| நத்தார் திருநாள் | 19 |
| பட்டிப் பொங்கல் | 20 |
| குளத்தில் நீராடினேன் | 21 |
| எனது சிறிய தோட்டம் | 22 |
| நான் வளர்க்கும் பூனைக்குட்டி | 23 |
| நாய் தன் கதை சொல்கிறது | 24 |
| விளையாடுவோம் | 25 |
| அன்பு | 26 |
| முற்றத்து றோசா | 27 |
| மாலைப் பொழுது | 28 |
| வீட்டு வேம்பு | 29 |
| எனக்குக் கிடைத்த புதிய புத்தகம் | 30 |
| கிராமத்தில் ஒரு வாரம் | 32 |
| அன்னை திரேசா | 33 |
| பகிர்ந்து வாழ்வோம் | 34 |
| அண்ணா கண்ட கனவு | 35 |
| தந்தை தாய் பேண் | 37 |
| பனை மரம் | 38 |
| தெருவில் கிடந்த பணப் பை | 39 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய வழிபாடு

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"

"ஆலயம் இல்லா ஊர் பாழ்"

இவை நம் மூதாதையர்கள் கூறிவைத்த அறிவுரைகள். ஆலயம் என்பது ஆ + லயம், ஆ – உயிர்; லயப்படும் இடம். மெய். வாய். கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து புலன்களையும் ஒரு வழிப்படுத்தி இறைவனை வழிபாடு செய்யும் இடம் என்பது பொருள்.

கோ என்பது இறைவன் (தலைவன்) இல் என்பது வீடு. இறைவன் குடிகொண்டிருக்கும் வீடே கோவில்.

வேண்டுவார் வேண்டுவதை ஈய்பவன் இறைவன். அவனை வேண்டுதல் செய்ய நாடிச் செல்கின்றோம். அதுவே வழிபாடு செய்யும் பொது நிலையமாகின்றது. மக்கள் ஒன்றுகூடி வழிபாடு செய்யும் நேரத்தில் மனம் ஒரு வழிப்படுகின்றது. தேவ நாமங்கள் உச்சரிக்கப் படுகின்றன. தம்மை மறந்து தலைவனாகிய இறைவனை நினைந்து கண்ணீர் சொரிந்து இருகரம் கூப்பி வணங்குகின்றனர்.

இந்துக்கள் தேவார, திருவாசகங்களைப் பாடி பரவசமடைகின்றனர். கிறிஸ்தவர்கள் பக்திப்பாடல்களைப் பாடி செபம் சொல்லி ஆண்டவனை வழிபடுகின்றனர். அமைதி பெறுகின்றனர், வேண்டுதலை வேண்டுகின்றனர்.

ஆலயத்தில் மனித மனம் அமைதி காண்கின்றது. புலன்களின் அடக்கத்தால் பரிசுத்தமான எண்ணங்கள் தோன்றி உடல் புல்லரிக்கின்றது. வாய் தேவகானங்களை உச்சரிக்கின்றது. கண்கள் தேவ பூசைகளைக் காண்கின்றது. கரங்களைக் குவித்து தேவனுக்கு வணக்கம் செய்கின்றனர்.

ஆலயத்தில் மனிதன் தன்னை மறந்து ஆடுகின்றான்; பாடுகின்றான். ஆலயங்களில் நடைபெறும் அலங்கார உற்சவங்களைக் கண்டு ஆனந்த பரவசம் அடைகின்றான்.

கிறிஸ்தவ தேவாலயங்களில் இத்தகைய நிகழ்வுகளை நவநாள் ஆராதனைகளில் காணலாம்.

தேவாலயங்களில் நற்போதனைகள் மனிதனுடைய அன்றாட வாழ்வை சீர்படுத்தி மனத்தூய்மையுடன் நடமாடவைக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் தன்னிடம் உள்ள தீய செயல்களை கண்டறிந்து அவற்றை நீக்கி வாழ ஆலய வழிபாடு ஒரு திறவுகோலாக அமைகின்றது. இனபந்துகளைக் காணவும், பகுத்துண்டு வாழவும், உள்ளத்தில் அமைதியைப் பெறவும் நோன்புகளை அனுட்டிக்கவும் ஆலய வழிபாடு ஏதுவாகின்றது.

நாம் நேரங்களுக்கு எமது கருமங்களை ஆற்றும் தன்மையை ஏற்படுத்தவும் ஆலய வழிபாடு துணைபுரிகின்றது. வீணாகச் செலவு செய்யும் நேரத்தில் ஆலய முன்றலில் நல்லுபதேசங்களைக் கேட்கவும் தெளிவடையவும், உரையாடவும் ஆலய வழிபாடு வழி சமைக்கின்றது.

ஆலயம் தூய்மையான இடம். ஒழுங்கும், கட்டுப்பாடும் உடையதாக அமையவேண்டும். சிலர் இன்று இவற்றைக் கடைப்பிடிக்காது ஆலயத்தை மாசுபடுத்தி, பக்தர்களின் வழிபாட்டுக்கு இடர்பாடு செய்வதைக் காணலாம். இத்தகைய செயற்பாடுகளை அறிவுபடைத்த மனிதன் எப்பொழுது களைகின்றானோ அன்றே ஆலயவழிபாடும் தூய்மையடையும். மனிதனும் ஆன்ம முக்தியடைவான். ஆலய நிர்வாகம் சீராகவும் உண்மைப் பக்தர்களின் கண்காணிப்பிலும் இருந்தால்தான் ஆலயம் சீரடையும். வழிபாடும் சிறப்புறும்.

* * *

# உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்....

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வள்ளுவர் கூறிவைத்த அறிவுரை இது. உழுது, நிலத்தைப் பண்படுத்தி, அதில் பயிரை உற்பத்தி செய்து, விளைத்த தானியத்தை அறுவடை செய்து, தானும் உண்டு, பிறருக்கும் கொடுத்து வாழ்பவனே உயர்ந்தவன்; வாழத்தெரிந்தவன். தான் உயிர் வாழ்வதற்கு பிறரை எதிர்பார்த்திராதவன் உழுதுண்டு வாழ்பவனே. இதுவே வள்ளுவன் வாக்கு.

பசி வந்தால் புசிக்க வேண்டும். புசித்து வயிற்றுப் பசியைப் போக்க உணவு வேண்டும். உணவு சமைக்க அரிசி வேண்டும். சோற்றை சுவைபட உண்ண கறிவகை வேண்டும். பணம் இருந்துவிட்டால் இவைகளை கடைகளில் வாங்கிவிடலாம் என நாம் நினைக்கின்றோம். இந்த நினைப்பு பிழையானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் உற்பத்தியைப் பெருக்கி உணவுப் பற்றாக்குறையைப் போக்கி னால் எவருக்கும் அடிமைப்படாது சுதந்திரமாக உண்டு வாழலாம்.

பசிவந்திட நாம் எம்மையே மறந்து உணவுப்பொருள் வைத்திருப் பவர்களை நாடிச் சென்று இரந்து நிற்கின்றோம் என்பதையே வள் ளுவப் பெருமான் ''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல் லாந் தொழுதுண்டு பின் செல்வார்'' என மிக ஆணித்தரமாகக் கூறிவைத்துள்ளார்.

பணம் பசியை மாற்றாது. உணவே பசியைப் போக்கும். எனவே உழுதுண்டு வாழும் மனிதனே வாழத் தெரிந்தவன். பசியாற்றும் பண்டங்களைத் தேடி வைத்திருப்பவன் வாழத் தெரிந்தவன்.

இதனாலேயே ''உணவு கொடுத்தோன், உயிர் கொடுத்தோன்'' எனப் போற்றப்படுகின்றான். எனவே உழுதுண்டு வாழ்வானே வாழ் வான்.

❋ ❋ ❋

# சோம்பல் மிகக் கெடுதி

இல்லை; இயலாது என்ற சொற்களை துணைக்கொண்டு வாழ் பவர்களே சோம்பேறிகள். மனிதன் வாழப் பிறந்தவன். வாழ்வதற்கு பொருள் தேவை. பொருளைத் தேட முயற்சி இன்றியமையாதது.

முயற்சியுடையார் இகழ்ச்சியடையார். முயற்சி திருவினையாக்கும். இல்லையென்பதும், இயலாது என்பதும் எம்மை சோம்பல் பிணிக்குள் ஆழ்த்திவிடும். சோம்பல் மிகுதியால் ஒருவன் இல்லை – இயலாது என்று இருந்தால் என்றும் அவன் வறுமையால் வாடி வதங்கி தன்னைத்தானே அழித்துக்கொள்ளுகின்றான். முயன்றால் தேடலாம், வெற்றி காணலாம் என்ற உயர் நோக்குடையவராக நாம் வாழ்ந் தால் வாழ்வில் வெற்றி காண்பது நிச்சயம்.

சிறுவராகிய நாம் கல்வி கற்கின்றோம். கற்பதைத் தெளிவாக விளங்கிக் கொள்ளமுடியாத நேரத்தில் சோம்பல் மிகுதியால் நாளை படிப்போம் என்று வீணாகக் காலம் கடத்தக் கூடாது. தெரிந்த ஒரு வரை நாடி தெரியாததைத் தெளிவுபடுத்திக் கொள்ளவேண்டும். நாளை செய்வோம் என சோம்பலாக இருந்தால் வயது முதிர்ந்து விடும். சோம்பலும் நம்மைப் பிடித்துக்கொள்ளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? 'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து' என்ற வாக்கியங்களுக்கு அமைய நாம் வாழப் பழகிக் கொள்ளவேண்டும்.

சிறுவர்களாகிய நாம் எவ்வளவுக்கெவ்வளவு சோம்பலைப்போக்கி உற்சாகமாக நடமாடுகின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு வெற்றி களைக் கண்டடைவோம். சோம்பேறி தோல்விமேல் தோல்வியையே காண்பான். வாழ்வில் வெறுப்படைவான். தன்னையும் நம்பான். பிறரையும் நம்பான். இடைநடுவில் வாழ்வதையே வெறுத்து சாவுக்கு வழிதேடிக் கொள்வான்.

வாழ்வதும் தாழ்வதும் அவரவர் வாழ்க்கை முறையினாலேயே ஏற்படுகின்றது. சோம்பல் போக்கி, முயற்சி பெருக்கி நேரத்தைப் பொன்னாக மதித்து வாழ்பவனே மனிதனாக வாழ்கின்றான். தானும் மகிழ்ச்சி அடைந்து மற்றவர்களையும் வாழ வழி சமைக்கின்றான்.

❊ ❊ ❊

# காலை எழுந்தவுடன் படிப்பு

கவி பாரதி பாப்பாவுக்காகப் பாடிய பாடலில் காணப்படும் வரி யில் இதுவும் ஒன்று. பாப்பா, நீ பொய் சொல்லக்கூடாது: தெய்வம் நமக்குத் துணை; ஓடி விளையாடு; ஓய்ந்திருக்கலாகாது. கூடி விளை யாடு. இப்படியாக பல அறிவுரைகளை எமக்குப் புகட்டியிருக்கிறார். அத்தகைய அறிவுரைகளுள் ஒன்றே காலை எழுந்தவுடன் படிப்பு என்பதுமாகும்.

காலை நேரம் அமைதி கொண்ட மகிழ்ச்சியான நேரமாகும். நாள் முழுவதும் பாடுபட்டு பல்வேறு வேலைகளையும் செய்ததினால் உடலும் மனமும் களைப்படைந்து விடுகின்றது. அத்தகைய நிலை இல்லா நேரமே காலைப் பொழுது. புதிய உடற்தென்பும் மனத் தெளிவும் கொண்டவர்களாகவே காலை படுக்கையை விட்டு எழும்பு கின்றோம்.

அந்நேரத்தில் படிப்பது ஞாபகத்தில் வைத்துக்கொள்வதற்கும் மன னம் செய்வதற்கும் விளக்கமற்றதை தெளிவுபடுத்துவதற்கும் உகந்த தாகவும் அமையும். 'காலை எழுந்தவுடன் படிப்பு; பின் கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு; மாலை முழுதும் விளையாட்டு என்று வழக்கப்படுத்திக்கொள்ளு பாப்பா'. என்று பாரதியாரே நிரைப்படுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக் கூறியுள்ளார். படிப்பு முடிந்ததும் மனச்சோர்வு ஏற்படக்கூடும். அவ்வேளையில் நல்ல கனிவுள்ள பாடல்களைப் படிப்பதனால் எமக்கு புதிய ஒரு சக்தி பிறக்கும் என்பதே அவரது துணிவு.

மூன்றாவது, படிப்பாலும் பாடிய நிறைவாலும் உளமே வளர்ச்சி காணும். உடல் வளர்ச்சி பெறாவிட்டால் நோயும் நொடியும் பீடித்துக்கொள்ளும். அந்த நிலைமை ஏற்படாது உடலும் வலிமைபெற வேண்டும் என்பதினாலேயே மாலை முழுதும் விளையாட்டு எனவும் பாடிவைத்துள்ளார். மாலை நேரம் எனக் கூறியது அதிகளவில் பிற்பகலையே குறிக்கும் என்பதை நாம் நன்கு புரிந்து செயற்பட்டு வருகின்றோம். கல்வி மனிதனை மாண்புறச் செய்யும்.

* * *

# சத்துணவு

உடல் வளர்ச்சிக்கு சத்துணவு மிக அவசியம் என்பது உண்மை. இதை நாம் அதிக பணம் கொடுத்து வாங்கி உண்டால் தான் பெற்றுக்கொள்ளமுடியும் என எண்ணுவது தவறு.

இன்று நாம் உண்ணும் மேலை நாட்டு உணவுகளில் எதையுமே எமது மூதாதையர்கள் உண்ணவில்லை. அவர்கள் தாம் உற்பத்தி செய்த உள்நாட்டு விளைபொருட்களை உண்டே உடல் வலிமையுடன் நீண்ட ஆயுளைப் பெற்று நோயற்ற சுகவாழ்வு வாழ்ந்திருக்கின்றனர்.

சத்துணவு சரிவிகித உணவு என்பதே பொருள். விலை உயர்ந்த உணவுப் பண்டங்கள் என்பது பொருளல்ல. நாம் பிற நாட்டவர்களின் பழக்க வழக்கங்களையும் உணவுகளையும் எமதாக்கிக் கொண்டமையால் அவை கிடைக்காத காலகட்டத்தில் சத்துணவு கிடைக்கவில்லை என சங்கடப்படுகின்றோம். நாம் பழகிக்கொண்ட பழக்கங்களையும் மாற்றிக்கொள்ள பின்நிற்கின்றோம். கிடைக்கும் உணவுகளை வைத்திய ஆலோசகர்களின் கூற்றுக்கமைய சரிவிகித அளவுக்கு ஏற்ப உட்கொள்ளப் பழகிக் கொண்டால் நோயற்று வாழ முடியும்.

நம்மில் சிலர் மேய்ச்சல், ஆடு மாடுகளின் பால், மாமிசம் சத்து நிறைந்த உணவு என்று கூறுகின்றார்கள். அப்படியானால் அவைகள் எப்படித் தமக்கு வேண்டிய சத்துணவுகளைத் தேடிக்கொண்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது மண்ணில் காணப்படும் கீரை வகைகளையும் புல்பூண்டுகளையும், வைக்கோல் வகைகளையும் உண்டமையாற் தானே தேடிக்கொண்டன. இதை நாம் ஏன் சிந்திப்பதில்லை? சிந்தித்தாலும் பழக்க வழக்கங்களையும் மனநிலைகளையும் மாற்றிக்கொள்ளத் தயாராக இல்லை.

நாமும் எளிதாகக் கிடைக்கும் கீரைவகை, தானியவகை, கிழங்கு வகை, காய்கனிகளையும், பயறு வகைகளையும் உண்ண முன்வர வேண்டும். அப்படிச் செய்வோமானால் சத்துணவு பெற்று நோயற்ற வாழ்வு வாழமுடியும்' பணமுடையும் ஏற்படாது.

❊ ❊ ❊

# உழைப்போம் உயர்வோம்

நாம் இந்த மண்ணில் வாழப் பிறந்தவர்கள். நல்ல வண்ணம் வாழ்ந்தால் உயர்வு கிடைக்கும். வாழ்வதற்கு பணம் வேண்டும். பணம் தேட உழைப்பு அத்தியாவசியம். நாம் சோம்பியிருந்தால் எதையுமே தேடமுடியாது.

உழைப்பை பல வகையால் தேடிக்கொள்ள முடியும். கல்வி கற்றவர்கள் அதன் துணைகொண்டே தமது உழைப்பைத் தேடிக்கொள்கின்றனர். அரச பதவிகள், வங்கி லிகிதர்கள். பாடசாலை ஆசிரியர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள் எனப் பல இடங்களிலும் வேலையில் அமர்ந்து உழைக்கின்றார்கள்.

தொழில்களைக் கற்றவர்கள் அதன் மூலம் வேலை பெற்று ஊதியம் தேடுகின்றார்கள். சிலர் கமத் தொழிலைச் செய்து தாமும் உண்டு பிற செலவுக்கு வேண்டிய பணத்தையும் சம்பாதித்துக் கொள்ளுகின்றார்கள். மூலதனம் உடையவர்கள் தொழிற்சாலைகளை அமைத்து பலருக்கு வேலை ஏற்படுத்திக் கொடுத்து தாமும் பணம் தேடிக்கொள்ளுகின்றனர்.

வேறு சிலர் இங்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள முடியாமையினால் பிறநாடுகளுக்குச் சென்று வேலை செய்கின்றார்கள். அங்கு செய்யும் வேலை எதுவாக இருந்தாலும் அதைச் செய்து அதிகளவில் பணம் சம்பாதிப்பதில் மட்டும் நாட்டம் கொள்ளுகின்றார்கள். இத்தகைய நிலைமையால் அவர்கள் பெற்ற கல்வி அறிவு பயனற்றதாகி விடுகின்றது. ஆனால் அத்தகையவர்களின் குடும்பப் பொருள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமானம் உயர்வடைகின்றது. நாட்டை மறந்து தமது உயர்வை மட்டும் கருத்தில்கொண்டு வெளிநாடு செல்வோர்களும் பலர் எமது சமூகத்தில் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களது வயோதிபத் தாய் தந்தையர்கள் இங்கு பராமரிக்க எவருமில்லாது சொல்லொணாத் துன்பத்தை அனுபவிப்பதையும் நாம் காண்கின்றோம்.

இவற்றுக்கெல்லாம் பணம் தேடும் வாழ்க்கையே காரணமாக அமைகின்றது.

உழைப்பு மிக அவசியம். அதை உன்னதமான முறையில் தேட வேண்டும். நற்கருமங்களில் செலவு செய்ய வேண்டும். அத்தகைய தன்மையைக் கடைப்பிடிக்காது கண்ட வழிகளில் பொருளைத் தேடிக் குவித்து வைத்திருந்தாலும் வாழ்வில் அமைதி காணமுடியாது.

* * *

# தன் கையே தனக்குதவி

நாம் எமது கைகளைக் கொண்டே எமது தேவைகளை நிறைவு செய்கின்றோம். உடல் ஊனமுற்றவர்களே தமக்கு வேண்டியதைத் தாம் செய்துகொள்ள முடியாது துன்பப்படுவார்கள். எதற்கும் பிறர் தயவை நாடி நிற்பார்கள். உதவி புரிவோர் தமக்கு நேரம் கிடைக்கும் வேளைகளிலேயே அவர்களுக்கு உதவி புரிய முன்வருவார்கள். சிலர் தமக்கு வேலை இருந்தால் உதவ முன்வரவும் மாட்டார்கள். உதவி கோரும் ஊனமுற்றோரின் மனங்கள் நோவும்படியாகவும் வார்த்தைகளால் பதில் கூறவும் தயங்கமாட்டார்கள். நல்ல மனமுள்ள பண்பாளர்கள் காலநேரம் பாராமல் பிறருக்குதவுவதே ஒரு மேலான பணி எனக் கருதி எப்பொழுதும் உதவிபுரிவார்கள்.

நாம் ஊனமுற்றோரின் வாழ்க்கையையும் அவர்களுக்கு உதவுபவர்களையும் உதவ முயலாதவர்களையும் ஒப்புநோக்கிப் பார்க்கலாம்.

உடல் ஊனமற்ற திடமான மனிதர்கள் பலர் பலமிருந்தும் வாழ வழியிருந்தும் எடுத்ததற்கெல்லாம் பிறர் தயவையே நம்பி வாழுகின்றனர். இவர்கள் தம்மைத்தாமே கொண்டு நடாத்த மனத்திடமில்லாதவர்கள். தம்மில் தாமே நம்பிக்கையற்றவர்கள். பிறர் தயவில் என்றும் வாழ்ந்து பழகியவர்கள். தன் கால்களில் நிற்கத் தைரியமற்றவர்கள். மற்றவர்களின் தயவை நாடி வாழ்வதால் சுதந்திரமாக எதையும் செய்யக்கூடிய தெம்பு இல்லாது அடிமைத்தனத்தை ஏற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கின்றனர். இத்தகையவர்கட்கு துணை நிற்பவர்கள் மறுதலிக்கும் போது என்ன செய்வதென்றே தெரியாது தடுமாறித் தத்தளிக்கின்றனர்.

இந்நிலையால் தமது குடும்ப வாழ்வைக் கூட சீரற்றதாக்கிக் கொள்கின்றனர். வருவாயைத் தேடிக்கொள்ள முடியாது மற்றவர்களின் தயவில் வாழ்ந்த பழக்கத்தால் சமூக வாழ்வில் அளப்பரிய தொல்லைகளைச் சந்திக்கவேண்டியவர்களாகின்றார்கள். அதனால் மன வேதனை அடைந்து பலரது நட்பைக் கெடுத்துக் கொள்ளுகின்றார்கள். பிறர் தயவை எதிர்நோக்காமல் தானென வாழப் பழகிக் கொண்டவர்கள் வாழ்வில் எத்தகைய நிலைமையிலும் தம்மைத்தாமே சீராக்கி துன்பத்தை நீக்கி இன்பத்தைத் தேடிக்கொள்கின்றனர். எந்த நிலைமையிலும் தன் கையே தனக்குதவி என்ற மனத்திடத்துடன் வாழ்ந்தால் வாழ்வில் வெற்றி காணலாம். தன்னம்பிக்கையுள்ளவன் என்றும் எந்த நிலைமையிலும் பிறர் தயவை நாடமாட்டான்.

உறுதியான வாழ்வு உயர்வைத் தேடித்தரும். தன் கை தவக்கு உதவுவது போல பிறர் கை எப்பொழுதும் உதவாது என்பதை நன்கு தெரிந்துகொள்ளவேண்டும்.

* * *

# என் தாய் மொழி

தமிழ் என் தாய் மொழி. தாயின் மடியில் இருந்து பால் உண்ட பொழுது அம்மா என்ற முதல் வார்த்தையை தமிழ் மொழியிலேயே உச்சரித்தேன். அந்த இன்ப மொழில் தான் கல்வி கற்று வருகின்றேன்.

இன்பத் தமிழ் என் உயிரினும் மேல் என பாரதி வழிவந்த புரட்சிக் கவி பாரதிதாசனும் கூறியுள்ளார்.

இன்று மொழி வளத்தில் ஜேர்மனி, பிரான்ஸ், ருஷ்யா, சீனா என்பன முன்னிற்கின்றன. என் தமிழ்மொழியும் அவற்றுடன் சரிநிகர் நிற்கக் கூடிய தகைமை இருந்தும், அதிகளவில் தமிழ்பேசும் மக்களிடையே தவழ்ந்து கொண்டிருக்கிறது. எமது இனத்தின் விழிப்புணர்வுக் குறைவும் வரலாற்று ஆய்வுகளை மேற்கொள்ளாமையுமே இதற்குக் காரணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைக்கால தமிழ் அரசர்கள் தமிழ் மொழியையும், தமிழ் படித்த அறிஞர்களையும் பேணிக் காத்து வந்தனர். அவர்களை ஊக்குவித்தனர். தமது அரசவைகளில் இடம்கொடுத்து நல் உபதேசங்களைப் பெற்று வாழ்ந்தும் வந்தனர். அக்காலத்தில் முச்சங்கங்கள் எழுந்தன. கடற்கோளினால் முதல், இடைச்சங்க நூல்கள் மறைந்தன. கடைச் சங்க நூல்கள் சில தமிழர் மத்தியில் இருந்தாலும், இன்று பிரசுரிக்கப்படாமையால் அவற்றைக்கூட மக்கள் வாங்கிப் படிக்க முடியாத நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

எனது தமிழ்மொழி, இளமையுடையது. சுவையுடையது. அதைப் படித்தவர்களும் பாமரர்களும் கற்றுக்கொள்ள வேண்டும் என்பது பாரதி கண்ட கனவு. அதை நனவாக்கினார் பாரதியார். எளிய நடையில் மக்களுக்காகப் பாடினார், எழுதினார். அவரை அடியொற்றி பாரதிதாசனும் இன்றைய பல கவிஞர்களும் எளியநடையில் நூல்கள் படைத்துள்ளனர். இன்றும் பலர் மொழித் தொண்டு ஆற்றி வருகின்றனர்.

இன்று எமது ஈழதேசத்திலும் பல நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன அவற்றை மக்கள் தமதாக்கி மொழியை வளம்படுத்த முன்வரவேண்டும். பிறமொழி அறிஞர்களின் நூல்களைத் தமிழ்மொழியில் கொண்டுவரவேண்டும். திருக்குறள், பாரதி பாடல்கள் பிறமொழியாளர் கைக்குச் சென்றடைந்ததுபோல தரமான தமிழ் நூல்கள் யாவும் சென்றடைய வைக்கவேண்டும். தமிழ் வாழ, தமிழன் புகழ் ஓங்க, தமிழர்கள் ஒவ்வொருவரும் முயலவேண்டும்.

* * *

# வருமுன் காப்போம்

நோய் வந்துவிட்டது. நோயாளியைக் காவிக்கொண்டு வைத்தியனைத் தேடிப் போகின்றோம். நோயால் நோயாளி பாதிக்கப்பட்டால் வைத்தியனை வாய்க்கு வந்தபடி வைகின்றோம். ஆண்டவனைக் கூட திட்டித் தீர்க்கின்றோம். ஆனால் நோய் வந்ததிற்குரிய காரணங்களைக் கண்டறிய முயல்வதில்லை. நாமே எமது உடலில் நோயைத் தேடிக்கொள்ளுகின்றோம் என்பதை உணர்வதில்லை.

''வாந்தி பேதி கொடியநோய் வருமுன் காப்போம்'' என்று தினமும் வானொலி கதறுகின்றது. நீரைக் கொதிக்க வைத்துப் பருகுங்கள், நோயாளியைத் தனிமைப்படுத்தி வைத்துப் பராமரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுங்கள். வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லுங்கள்: மலசலகூடங்களை உபயோகியுங்கள்; அழுக்குகளை வெட்டிப் புதையுங்கள்; சவர்க்காரம் கொண்டு கைகழுவுங்கள் என்றெல்லாம் வானொலியும் பத்திரிகைகளுகளும், வைத்தியர்களும், சுகம் காக்கும் பிரிவினரும் எமக்கெடுத்து ஓதுகின்றார்கள். நாமும் தினமும் கேட்கின்றோம். ஆனால் இவற்றை செயற்படுத்தத்தான் தவறிவிடுகின்றோம். நோய் வந்தபின்தான் எமது தவறை நினைத்து வேதனைப்படுகின்றோம்.

நுளம்புக் கடியால் மலேரியா நோய் ஏற்படும். எலி கடித்தால் பிளேக் என்னும் கொள்ளைநோய் உண்டாகும். அசுத்த நீரினால் வாந்திபேதி பரவும். காற்றும் இலையானும் க்ஷயநோய்க் கிருமிகளைக் காவிச் செல்லும் என்பதையெல்லாம் நாம் படித்திருக்கின்றோம். பிறர் சொல்லக் கேட்டிருக்கின்றோம். கண்ணுக்குத் தெரியாத நோய்க்கிருமிகள் எம்முடலில் புகுந்துவிடுகின்றன. அதனால் நோய் வாய்ப்பட்ட பின்தான் மருந்து தேடிப் புறப்படுகின்றோம். அவற்றின் கொடிய தாக்கங்களை அறிந்து கொள்ளுகின்றோம். நோயாளி நோயால் வேதனையடைகின்றான். சிலகால் மரணிக்கின்றான். நாம் நோயாளியால் சொல்லொணாக் கஷ்ட நஷ்டங்களை அனுபவிக்கின்றோம்.

நோய்த் தடுப்புக்களைப் பெற்றுக்கொள்வதாலும் சுகாதாரமுறையைக் கைக்கொள்வதனாலும் நாம் நோய் இன்றி வாழலாம்.

''நோய்க்கு இடம் கொடேல்''

❋ ❋ ❋

# கந்தையானாலும் கசக்கிக் கட்டு

''கூழானாலும் குளித்துக் குடி''

''கந்தையானாலும் கசக்கிக் கட்டு'' என்பது நமது முன்னோர்களின் வாய்மொழி.

''சுத்தம் சோறிடும்'' என்பதும் வாய்மொழியே. நாம் நோயற்ற வாழ்வு வாழ்ந்தால் குறைவற்ற செல்வம் உடையவர்களாக இருப்போம்.

நோய் உடற்சுகத்தைக் கெடுப்பதுடன் மனக்கவலையையும் உண்டாக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வம் படைத்தவர்கள் விரும்பிய நேரத்தில் விரும்பிய புதிய ஆடைகளை வாங்கி அணிவர். அவர்கள் தமது உடற்சுகத்தைப் பேணுவதுடன் தமது உடையையும் தாம் விரும்பியவாறு அழகுபடுத்திக் கொள்கின்றனர். உடலை வெயில், காற்று, மழை, பனியில் இருந்து பாதுகாக்க உடை மிக அத்தியாவசிமானது. அதற்கு பட்டுடை அல்லது புதிய உடைதான் அணிந்துகொள்ளவேண்டிய அவசியமில்லை. எமது உடலைப் பேண பழைய பருத்தி உடையே போதுமானது. ஆனால் அந்த உடை அழுக்கற்றதாக இருக்க வேண்டியது அவசியம். அதனாலேயே "கூழானாலும் குளித்துக் குடி" "கந்தையானாலும் கசக்கிக் கட்டு" என்று நமது மூதாதையர் கூறி வைத்துள்ளனர். இதை நாம் கைக்கொண்டு வாழ்வது நமது தலையாய கடமையாகும்.

நாம் சுத்தமாக இராவிட்டால் எம்மைப் பிறர் கௌரவிக்க மாட்டார்கள். அதனாலேயே "சுத்தம் சுகம் தரும்" எனக் கூறி வைத்துள்ளனர்.

நோயாளி தான் வேதனை அடைவதுடன், தன் குடும்பத்தினரையும் ஆறாத்துயரில் ஆழ்த்தி விடுகிறான். நோயாளி உழைக்க முடியாது இருக்கும் வேளையில் நோயாளியை வைத்துப் பராமரிப்போர் பெரிய பணமுடைக்காளாகி துன்பமடைவதையும் காணுகின்றோம்.

சுத்தமான வாழ்வு வாழ்ந்தால் நாம் நோயற்று நீண்டகாலம் மனநிறைவுடன் வாழலாம்.

* * *

# சனசமூக நிலையம்

இன்று எமது பிரதேசத்தில் எண்ணற்ற சனசமூக நிலையங்களைக் காணலாம். இவை மக்கள் ஒன்றுகூடி தமது பிரச்சினைகளையிட்டு கலந்துபேசும் பொது இடம். இவைகளின் பணிகளால் கிராமத்தின் பிரச்சினைகள் பலவும் எடுத்து ஆராயப்பட்டு மக்களின் விருப்புக்கு அமைய செயலாக்கப்பட வேண்டும்.

இதன் நிர்வாகத்தில் இளைஞர்கள், நடுத்தரவயதினர், வயோதிபர் என முத்தரப்பாரும் இடம்பெற வாய்ப்பு இருக்க வேண்டும். வயதுக்கேற்ப பிரச்சினைகளும் தேவைகளும் சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் வேறுபட்டனவாகவே இருக்கும். சகலரதும் ஆலோசனை களைக் கொண்டே செயற்பாடுகள் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். அதை விடுத்து ஒத்த வயதினர் ஒன்று கூடி கிராமிய வளர்ச்சித் திட்டத்தை செயற்படுத்தினால் மற்றையவர்கள் பாதிக் கப்பட்டு மனவேதனை அடைவர்.

வயதைப் போன்று படித்தவர்கள், கல்வியில் குறைந்தவர்கள், பணம் படைத்தவர்கள், ஏழைகள் யாவரும் பங்கு கொள்ளக் கூடியவாறு நிலையங்கள் அமைய வேண்டும். பெண்களது வளர்ச் சிக்குரிய விடயங்களிலும் சனசமூக நிலையங்கள் முன்னின்று உழைக்க முன்வரவேண்டும. வாசிகசாலையாக செயற்படுவது சனசமூக நிலை யத்தின் ஒரு சிறு பகுதிக் கடமையே ஆகும். ஒரு சிறு வாசிகசாலைக் குரிய வேலைகள் நடைபெற்றால் அது சனசமூக நிலையமாகாது.

கிராமத்தில் சிறுவர் பராமரிப்பு, கல்வி வளர்ச்சி, சுகாதாரப் பணி, உற்பத்தியாக்கம், தொழில்வாய்ப்பு, விளையாட்டு, கூட்டுறவு கலை வளர்ச்சி, மொழிவளர்ச்சி என்பனவற்றின் அபிவிருத்தியில் ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து செயற்படுத்த வேண்டியது சனசமூக நிலையத்தின் தலையாய கடமையாகும். இவற்றை நன்குணர்ந்து சனசமூக நிலையங்கள் செயற்பட்டால் எமது சமூகம் சகல துறைகளி லும் வளர்ச்சி அடையும். சமூகக் கட்டுக்கோப்பும், பொருளாதார அபிவிருத்தியும் ஏற்படும். சமூக ஏற்றத்தாழ்வும் ஓடி மறையும். பொது நிலையங்கள் வளர்ச்சியுறும்.

* * *

# நானும் ஒரு கிளியானேன்

வயல்வெளி நெற்தானியம் நிறைந்து இருந்தது. நெற்கதிர்களைக் கொய்ய கிளிகள் கூட்டம்கூட்டமாகப் பறந்து வந்துகொண்டிருந்தன.

நான் கல்லெறிந்து கிளிக் கூட்டத்தைக் கலைத்துவிட நினைத் தேன். அவற்றின் அழகு என்னை அவ்வாறு செய்யவிடாது தடுத்தது. திடீரென கிளியோடு நானும் ஆகாயத்தில் பறக்கிறேன். அந்தக் கிளிகளிடையே என்னே இன ஒற்றுமை இருக்கிறது!

பல கிளிகள் ஒன்றாகச் சேர்ந்து வருகின்றன. ஒரே இடத்தில் கூட்டமாக இறங்கி உணவைத் தேடுகின்றன. காய்கனிகளைத் தம் செக்கச் சிவந்த சொண்டினால் கொத்திக் கொத்தித் தின்னுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்கள் அவற்றைத் துரத்தினால் தமது அழகிய பச்சைநிற இறக்கைகளை விரித்து அழகாக ஒன்றாகவே எழுந்து சத்தமிட்டவாறு பறந்து செல்கின்றன.

தாம் தேடிய உணவை கூட்டில் இருக்கும் தம் குஞ்சுகளுக்கும் கொண்டு போய் ஊட்டுகின்றன.

தமக்குரிய உணவுகள் இருக்கும் வெவ்வேறு இடங்களை தேடிக் கண்டறிந்து கொள்கின்றன.

கருவுற்று முட்டையிட்டு அடைகாத்து குஞ்சு பொரிக்க தமக்கு பாதுகாப்பான அழகான கூட்டைத் தேடிக் கொள்கின்றன. இனமாக வாழ்ந்தாலும் பெண்ணுக்கு ஒரு ஆண் துணை நிற்கின்றது.

எனக்குப் பின்னால் ஒரு மனித சத்தம், ''எடே, உன்னையே மறந்து கிளிகளையே பார்த்துநிற்கும் இலட்சணம் நன்றாக இருக்கின்றது!'' சிந்தனை கலைந்தது. திரும்பிப் பார்த்தேன், எனது அப்பா என்னை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தார். எனது எண்ணங்களும் வண்ணச் சிறகடித்து கிளியோடு கலந்திருந்ததை அதுவரை நான் உணரவில்லை.

❊ ❊ ❊

# முக்கனிகளில் முதற்கனி

வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம் ஆகியனவே முக்கனிகள். இவற்றில் எங்கும் எப்பொழுதும் கிடைக்கக் கூடியது வாழைப்பழம். பழம், பாக்கு, வெற்றிலை எனக் கூறுமிடத்தில் முதலிடம் பெறுவதும் வாழைப்பழமே. எம்மவர்களின் இல்லங்களிலும் ஆலயங்களிலும் இடம்பெறும் நிகழ்ச்சிகளிலும் முதற்கனியாக உபயோகிக்கப்படுவது வாழைப்பழமேயாகும். நோய்க்கு ஆக்கும் மருந்திலும் இது இடம் பெறுகின்றது. மனித உடலுக்கு சக்தி கொடுக்கும் தன்மைகளைத் தன்னிடத்தே கொண்டுள்ளது.

வாழைமரம் உலகின் சகல பாங்களிலும் வளர்க்கப்படுகிறது. இதை ஏழைகளின் கனி என்றும் கூறுவார்கள். குழந்தை முதல் வயோதிபர் ஈறாக இதை விரும்பி உண்பார்கள்.

எம் நாட்டிலும் எல்லாப்பிரதேசங்களிலும் வாழைமரம் வளர்க்கப்படுகின்றது. இதில் கதலி, கப்பல், இதரை, மருத்துவம், பன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப்பல இனங்கள் உண்டு. கறி ஆக்குவதற்கு மொந்தன் வாழைக் காய் மிகச் சிறந்தது.

வாழைப்பழம் உணவாகின்றது; காய் கறிசமைக்க உதவுகின்றது: பூவை வறையாக்கிச் சாப்பிடுவார்கள், வாழை மர நடுத்தண்டு, அடிக்கிழங்கு என்பனவற்றிலும் பலர் கறி சமைப்பார்கள். இலை உண்கலமாக உபயோகிக்கப்படுகின்றது. வாழைத்தடல் எடுத்து வாழைநார்ப் பட்டு ஆக்குவார்கள்.

யாழ்ப்பாணத்தில் நீர்வேலி கிராமம் வாழைச் செய்கையில் முதலிடம் வகிக்கிறது. வாழைச் செய்கையாலும், வாழைப்பழ விற்பனையாலும் பலர் தமது வாழ்க்கைக்கு வருமானம் தேடிக் கொள்கின்றார்கள்

தோட்டங்களில் நிற்கும் வாழைகள் அகிவேக காற்றுக்கு குலைகளுடன் முறிந்து தலை சாய்ந்து கிடக்கும் காட்சி மிக வேதனையைத் தரும். தோட்டக்காரனுக்கு பாரிய பண நட்டத்தையும் ஏற்படுத்தும். வாழையடி வாழையாக இனத்தைப் பெருக்கி வளங்கள் தரும் வாழையை நடுவோம், வாழைப்பழம் உண்போம்.

❊ ❊ ❊

# எனது வகுப்பாசிரியை

எனது வகுப்பாசிரியை ஒரு இளம் பெண். பெயர் திலகம். இவர் மாணவர்களாகிய எங்களுடன் அன்பாகப் பழகுவார், மிகவும் இனிமையாகக் கதைப்பார். கோபமென்பது தெரியாதவர். எங்களோடு தாயாகவும், சகோதரியாகவும், பாட்டியாகவும் நடந்துகொள்ளுவார். அதனால் நாம் அவருடன் நெருங்கிப் பழகுவோம்.

அவரது தாய் தந்தையர்கள் மிகவும் செல்வம் படைத்தவர்கள். ஆனால் மிகவும் எளிமையாகவே வாழ்ந்து வருகின்றார். தனது பொழுதின் பெரும்பகுதியை பாடசாலை வேலைகளிலேயே செலவு செய்வார். அதனால் அதிபர் கூட இவரை நன்கு மதிக்கின்றார்.

சில ஆசிரியர்கள் தாம் படித்தவர்கள், பெரியவர்கள், எல்லாம் தெரிந்தவர்கள் என்ற நினைவு கொண்டவர்களாக நடமாடுவார்கள். மாணவர்களாகிய எம்மை மிகக்கண்டிப்பாக நடத்துவார்கள். ஆனால் திலகம் ஆசிரியை எமது வகுப்பு மாணவர்களை மட்டுமின்றி பாடசாலையில் கற்கும் மாணவர்களினது நலன்களிலும் அக்கறை காட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார். அதனால் இவருக்கு பாடசாலையில் கற்கும் சகல மாணவரும் பணிவும் அன்புமுடையவர்களாக நடந்து வருகின்றனர். அன்புடையார் என்றும் பிறர்க்குடையார் என அடிக்கடி கூறுவார்.

ஆசிரியை எமக்கு கற்பிக்கும் வேளைகளில் எமது வேலைகளை மிக உன்னிப்பாகக் கவனிப்பார். குறைகளைக் கண்டறிந்து தனித்தனியாக திருத்தம் செய்வார். அடிக்கடி எமது பெற்றோர்களை அழைத்து எமது குறைநிறைகளை உரையாடுவார். நாம் சில நாட்கள் பாடசாலை செல்லாவிட்டால் வீடுவந்து எம்மை பார்வையிடுவார்.

வகுப்பில் சோர்வுற்று இருக்கும் மாணவர்களை தனியாக அழைத்து, வினவி அவர்களுக்கு பிறர் அறியாதவாறு குறைகளைப் போக்கி வைப்பார். நாம் நோயுற்று பாடசாலைக்கு செல்லாத வேளைகளில் எமது வீட்டுக்கு வருகைதந்து எமக்கு தென்பு கூறுவார். அன்பளிப்புகளும் தருவார். இவர் வேதனத்துக்காக இந்த ஆசிரியத் தொழிலைச் செய்பவர் அல்ல. தொண்டெனக் கருதி ஆசிரியையாக கடமை புரிகிறார். இவரது மனப்பாங்கைப் பார்க்கும் போது எம் நாட்டு அன்னை திரேசா என்று அழைக்கலாம் என்று தோன்றுகிறது.

அமரர், ஆர். வி. எஸ். திருநாவுக்கரசு நினைவு
கல்வி புலமைப் பரிசில் நிதியம், நெடுந்தீவு
EDUCATION SCHOLARSHIP FUND
In Memory of Late
R. V. S. Thirunavukkarasu - Delft

# பாப்பாவுக்குப் பாட்டுப் பாடிய பாரதி

பாரதியார் புதுமைக் கவிஞர். மக்களுக்காகப் பாடினார். தூய தமிழில் எளியநடையில் மக்களுக்கு தனது கருத்தை தெரியவைத்தார். அதனால் "மக்கள் கவி" எனப் போற்றப்படுகின்றார். அதனாலே அவரது பெயரும் கவிதைகளும் மக்களிடையே வாழ்ந்துகொண்டு வருகின்றன.

நாட்டின் அடிமைத் தனத்தைப் போக்க சுதந்திரக் கனலை எழுப்பினார். சாதி பார்க்கும் மூடத் தனத்தைச் சாடினார். தான் கண்ட தெய்வத்தைப் போற்றினார். பெண்ணின் அடிமை விலங்கை உடைத்தெறிய முயன்றார். பாலராகிய எமக்கும் பாப்பா பாட்டின் மூலம் வாழ நெறிமுறை புகட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடி விளையாடு பாப்பா — நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா — ஒரு
குழந்தையை வையாதே பாப்பா.

பாரதியார் குழந்தைளாகிய எமக்காக பாடிய பாட்டில் ஒரு பாட்டு இது. குழந்தைகளே நீங்கள் ஓடி விளையாடுங்கள். சோம்பேறிகளாக ஒரு இடத்தில் ஓய்ந்து இருக்காதீர்கள். இதனையே, "சோம்பல் மிகக் கெடுதி பாப்பா"வென பிறிதொரு கவிதையில் கூறிவைத்துள்ளார். ஒற்றுமையாக சிறுவயதிலிருந்தே வாழ வேண்டுமென்பதையும் எடுத்துக்காட்டிள்ளார். அன்றி குழந்தைகளாகிய நாம் எம்மிடையே முரண்பட்டு வைது கொள்வதையும், அது எமக்கு ஏற்றதல்ல என்பதையும் பாரதியார் எடுத்துக் காட்டியுள்ளார்.

"பொய் சொல்லக் கூடாது பாப்பா,
என்றும் புறம் சொல்லலாகாது பாப்பா
தெய்வம் நமக்குத் துணை பாப்பா.
ஒரு தீங்கும் வரமாட்டாது பாப்பா."

என்றும் பாடியுள்ளார்

❊ ❊ ❊

# மழை நாள்

அன்று ஐப்பசி மாதம் வெள்ளிக்கிழமை நேரம் பிற்பகல் இரண்டு மணி. பாடசாலை விடுகை மணி அடித்து ஓய்ந்து மாணவர்கள் எல்லோரும் வீடுநோக்கிப் புறப்பட்டோம். திடீரென நாலா பக்கமும் வானத்தை இருள் சூழ்ந்துகொண்டது. இடிமுழக்கம், மின்னல். காதுகளை இறுகப் பொத்தி கண்களையும் இறுக மூடிக் கொண்டேன். சோ என மழையும் பொழியத் தொடங்கியது. என்ன செய்வதென்று அறியாமல் மாணவர் சிதறி நாலா பக்கமும் ஓடத் தொடங்கினர். நானும் ஓடினேன். பாடசாலை மண்டபத்தை நானும் சில மாணவிகளும் சென்றடைந்தோம்.

மழை விடாமல் பெய்து கொண்டிருந்தது. மாலை ஆறு மணியாகியது. மழைக் குளிரால் எமது உடல்கள் நடுங்கத் தொடங்கியது. வீட்டார் எம்மைத் தேடி அலைவர் என்ற எண்ணமும் உதயமாகியது. பாடசாலை மண்டபத்திற்கு சிறிய போத்தல் விளக்குடன் அதிபர் வந்தார். அவரைத் தொடர்ந்து ஒருவர் வாளியில் ஏதோ கொண்டு வருவதைக் கண்டோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிள்ளைகளே உங்களுக்கு சுடச்சுடத் தேனீர் கொண்டு வந்திருக்கிறேன். குடியுங்கள், குளிருக்கு நல்லது" என்றார்.

நாங்களும் தேநீரை வாங்கிப் பருகினோம். அந்நேரத்தில் அத்தேநீர் எமக்கு உடற் தென்பைத் தந்தது. அதிபரும் எங்களுடன் இருந்து அளவளாவிக் கொண்டிருந்தார்.

சுவரில் மாட்டியிருந்த கடிகாரம் ஏழு அடித்து ஓய்ந்தது.

பாடசாலை வெளிப்புறத்தை எட்டிப் பார்த்தோம். சோவெனப் பெய்த மழை மெல்லெனத் தூறத் தொடங்கியது, நாமும் தெருவுக்கு வந்தோம். வீதி எங்கும் ஒரே வெள்ளம். வீட்டாரும் எம்மைத் தேடிவந்து கொண்டிருந்தனர். பகலாக இருந்தால் வெள்ளத்தால் ஏற்பட்ட நிசழ்வைக் கண்ணாரக் கண்டிருக்கலாம். இரவாக இருந்தமையால் தூற்றல் மழையில் நனைந்தவாறு வீடுகளுக்குச் சென்றோம்.

* * *

# ஆலமரத்தின் சுயசரிதை

கொடிய விமானக் குண்டு வீச்சுக்கு இலக்காகி பசுமை இழந்து நிற்கும் ஆலமரம் நான். எனது கிளைகள் சில முறிந்து தொங்கிக் கொண்டிருக்கின்றன. இலைகள் வாடிவதங்கி நாள்தோறும் உதிர்ந்த வண்ணம் இருக்கின்றன.

கிளைகளில் படுத்துறங்கிய பட்சிகளும் தமக்குப் பாதுகாப்பான இடம் தேடிப பறந்தோடி விட்டன சாயந்தர வேளைகளில் எனது நிழலின்கீழ் கூடி பல புதினங்களையும் அலசி ஆராயும் புத்திஜீவிகளும் வருகை தருவதை நிறுத்திக் கொண்டனர்.

சிறுவர்கள் ஒன்றுகூடி நிழலின்கீழ் விளையாடுவதையும் பயத்தினால் கைவிட்டு விட்டனர் வழிப்போக்கர்களுக்கு வியாபாரம் செய்து நாலு பணம் சம்பாதித்த அங்காடி வியாபாரிகளும் இப்பொழுது எனது நிழலை நாடி வருவதில்லை.

என்னை நம்பி எத்தனையோ ஆடு மாடுகளை இந்தக் கிராமத்தவர்கள் வளர்த்துவந்தனர். ஒரு பழுத்த இலை விழுந்தாலும் அதை எடுக்க போட்டி போட்டனர். இன்று ஆயிரக்கணக்கில் இலைகள் சொரிந்திருந்தும் அதைத் தேடுவாரில்லை, எப்படியான மனிதர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள்? எப்படி இந்த ஆலமரத்தை காப்பாற்றி எடுக்கலாம் என்று நினைப்பதில்லை.

எரிபொருள் தாராளமாகக் கிடைத்த காலத்தில் ஆலம் விறகை எரிப்பதை மனித இனம் விரும்பியதில்லை. இன்றைய சூழ்நிலையில் நான் எப்பொழுது ஈரலிப்பு வற்றிக் காய்ந்து விறகாவேன் என்று எண்ணி அங்கலாய்த்துத் திரிகின்றனர். என்னே! இவர்களை நினைக்க வெந்த என் உடலின் வேதனை அதிகரிக்கின்றது.

❊ ❊ ❊

# பூக்கள்

பூக்களில் பல இனங்கள் உண்டு. பல நிறங்கள் உண்டு. பலவித வாசனையுண்டு. சில பூக்கள் மணமற்றவை. பாலர் முதல் முதி யோர் ஈறாகப் பூக்களை யாவரும் விரும்புவர்.

சில பூக்கள் தண்ணீரில் வளரும். கொடிகளிலும் சில பூக்கள் காணப்படும். செடிகளாகவே பூப்பன பல. சில மரங்களிலும் பூக்கள் காணப்படுகின்றன.

மல்லிகை, முல்லை என்பன இராக்காலத்திலேயே மலரும். தாமரை, அல்லி கிலோற்பலம் என்பன தண்ணீரிலேயே வளர்ந்து மலருவன

சில மலர்கள் மருந்தாக மக்களுக்கு உபயோகமாகின்றன. வேப் பம் பூவில் வடகம் செய்து உணவாக உண்பர். அகத்திப் பூ, செவ் வரத்தம் பூ என்பவற்றை கறி சமைக்க எடுப்பர்.

வீட்டுக்கு அழகைக் கொடுப்பதற்காக முற்றத்தில் பூச்செடி கொடிகளை வளர்ப்பார்கள். மலர்களின் வாசனை கலந்த காற்று உடலுக்கு சுகத்தைக் கொடுக்கும்.

பெண்கள் மாலையாகவும் தனியான பூக்களாகவும் தமது கொண் டையில் சூடுவர். அடியார்கள் பூக்களைத் தூவி இறைவனை வழி படுவார்கள். மக்களின் முக்கிய கொண்டாட்டங்களில் பூமாலை முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் பூமாலை கட்டுவதைத் தொழிலாகச் செய்து வருகின்றனர். இந்து ஆலயங்களின் அருகாமையில் பூந்தோட்டங்கள் அமைந்திருப்பதைக் காணலாம்.

தேனீக்கள் பூக்களிலிருந்து தேனைச் சேகரிக்கும். தேன் சுவை மிகுந்தது. மருந்துக்கு உபயோகிக்கப்படுகின்றது.

பூக்களே மரம், செடி. கொடிகளின் இனவிருத்திக்கு அடிநாதமாக அமைகின்றன

* * *

# நத்தார் திருநாள்

மனித குலத்தை மீட்கவந்த தேவகுமாரன் யேசுநாதர் பிறந்த நாளே நத்தார் திருநாள். ஆண்டுதோறும் இத் திருநாள் உலகிலுள்ள கிறிஸ்தவ மக்களால் மார்கழி மாதம் 25 ஆம் நாள் கொண்டாடப் படுகின்றது.

நத்தார் விழா அல்லது ''கிறிஸ்மஸ்'' விழா என்றால் சொல்லவா வேண்டும்? பாலர் முதல் குடு குடு கிழவர்வரை பணக்காரன் முதல் பரம ஏழைவரை தத்தம் இயல்புக்கேற்ப இவ்விழாவைக் கொண்டாடுவார்கள்.

மார்கழி 24 ஆம் திகதி இரவு நடுநிசி வேளையில் கூடி ஆராதனையில் ஈடுபடுவர்.

வீடுகள் தோறும் யேசுநாதர்ன் பிறப்பை உணர்த்தும் மாதிரி காட்சிகளை உருவச் சிலைகளாகக் கொண்டு அலங்கரித்து வைப்பார்கள். இவற்றை பிறமதத்தவர்கள் பார்ப்பதால் யேசுநாதரின் பிறப்பையும் நிகழ்வுகளையும் இலகுவாக அறிந்து கொள்ளமுடியும்.

இவ்வேளையில் தங்களது வீடுகளை அலங்கரித்திருப்பர். தெரு வாசலில் பல வர்ண வெளிச்சக்கூடுகளை தொங்கவிட்டிருப்பார்கள்.

தேவன் பிறந்த செய்தியை வீடு தோறும் அறியவைக்கும் பாவனையில் 'கரோல்' பக்திப் பாடல்களைப் பாடுவர். இதில் 'கிறிஸ்மஸ் தபத்தா முதலிடம் வகிப்பார் அவர் நத்தார் பரிசுகளைச் சிறுவர்களுக்கும் நோயாளர்களுக்கும் வயோதிபர்களுக்கும் வழங்கி அவர்களை மகிழவைப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுதோறும் சிறுவர்கள் ஆடிப்பாடி, பட்டாசு கொளுத்தி விளையாடுவார்கள்.

பெரியவர்கள் ஏழைகளுக்கு தம்மால் இயன்றளவு நன்கொடைகளைக் கொடுத்து உதவுவர்.

வீட்டுக்கு வருபவர்களை வரவேற்று பலவகைப்பட்ட இன்சுவை தின் பண்டங்களைப் பரிமாறிக் குதூகலிக்க வைப்பர். தாங்களும் உறவினர் நண்பர்களின் வீடுகளுக்குச் சென்று வருவர். நத்தார் திருநாளைக் தொடர்ந்து எட்டாம் நாள் புதுவருடப் பிறப்பைக் கொண்டாடுவார்கள்.

❋ ❋ ❋

# பட்டிப் பொங்கல்

தமிழர்களுடைய பொங்கல் விழா வருடம் தோறும் தை முதலாம் திகதி நடைபெறுகின்றது. உயிர் வாழ உணவு இன்றியமையாதது. அந்த உணவை உற்பத்தி செய்து மக்களுக்குக் கொடுத்து உதவுபவன் உழவன். கார்காத்த பூமியில் மழையை நம்பியே வாழ்பவன் உழவன். சூரியனின் உதவியாலேயே மழை பெய்கின்றது. அந்த சூரியனுக்கு நன்றி சொல்வதற்காகவே பொங்கல் விழா கொண்டாடப்படுகின்றது. சூரியனின் உதவி மட்டும் இருந்தால் போதாது. மாடு கமக்காரனுக்கு பல வகையில் உதவி புரிகின்றது. பரோபகாரம் கருதாத இம் மிருகத்திற்கு நன்றி சொல்லும் நாளே பட்டிப் பொங்கலாகும்.

இப் பொங்கல் விழாவை தைப்பொங்கலுக்கு மறுநாள் சிலர் கொண்டாடுவர். சிலர் தைப்பொங்கல் நாளில் இருந்து எட்டு நாட்களுக்கிடையில் கொண்டாடுவர். பசு மனிதனுக்கு வேண்டிய பாலைக் கொடுக்கிறது. பாலில் இருந்து மனிதன் தயிர், நெய், மோர் என்பவற்றை ஆக்குகின்றான். காளைக் கன்றுகளை ஈன்று கமக்காரனுக்கு உதவுகின்றது. எனவே மனித வாழ்க்கைக்கு மாடு உயிர் நாடியான மிருகமாக இடம்பெறுகின்றது.

பட்டிப் பொங்கல் தினத்தன்று பட்டியை நன்கு துப்பரவுசெய்து காளைகளையும் கன்றுகளையும் பசுக்களையும் குளிப்பாட்டுவார்கள். விபூதி, சந்தனம், பூமாலை என்பவற்றை இட்டு அலங்கரிப்பார்கள். தூப தீபங்களைக் காட்டி ஆராதனை செய்து வழிபாடு நடத்துவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கல் பிரசாதத்துடன் அங்கு படைத்த பழங்களையும் மாடு களுக்கு உண்ணக் கொடுப்பர். அவைகளை அன்று வேலைகளில் ஈடு படுத்தாது காலாற விடுவார்கள்.

பண்டைக்காலத்தில் கமக்காறனுக்கு பெருந்துணை புரிந்த இந்த மிருகத்தை இடைக்கால இயந்திரப் பெருக்கத்தால் மறந்து வாழ்ந்த எமது நாட்டு மனிதன், இன்று உள்ள சூழ்நிலையில் மீண்டும் இதன் உதவியை நாடி நிற்கின்றான்.

மனிதனின் உயிர் வாழ்விற்கு உறுதுணை பல புரியும் இம்மிரு கத்திற்கு நாமும் நன்றி சொல்வோம்.

* * *

# குளத்தில் நீராடினேன்

அன்று வெள்ளிக்கிழமை. காலை நீராடி அப்பாவும் அம்மாவும் கோவிலுக்குப் போவது வழக்கம். அவர்கள் அன்று கிணற்றில் நீரா டாது குளத்தில் நீராடப் புறப்பட்டனர். எனக்கும் அவர்களுடன் சென்று குளத்தில் நீராட வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது. எனது விருப்பத்தை அப்பாவிடம் சொன்னேன். ''சரி உடைகளை எடுத்துக் கொண்டு எம்மோடு வா'' என்றார்.

நானும் மிகுந்த குதூகலத்துடன் அவர்களைப் பின்தொடர்ந்தேன். ஐப்பசி மாத மழையால் குளத்தில் நீர்மட்டம் மிக உயர்ந்து காணப் பட்டது. அன்று பாடசாலை விசேட விடுமுறைநாள், எனது வகுப்பு மாணவர் சிலரும் அங்கு நீராடிக் கொண்டிருந்தனர். அவர்களைக் கண்டதும் நானும் அவர்களில் ஒருவனாகி விட்டேன். அம்மா முத லில் தான் கொண்டுவந்த துணிகளைக் கழுவினார்.

அப்பா கரையில் நின்றவாறு எங்களைப் பார்த்தார். ''பிள்ளை களே, நடுக்குளத்துக்குப் போகாதீர்கள். நீர் நிறைந்திருக்கிறது. உங்களுக்கு எட்டாது'' என்றார் நாங்களும் மிக அவதானமாக எமக்கு எட்டக் கூடிய அளவில் நின்று நீராடி விளையாடினோம். ஒருவருக்கொருவர் முகத்தில் நீரடித்தோம். ஓடித் திரியும் மீன் குஞ்சுகளைப் பிடிக்க முயன்றோம். அவைகளை எம்மால் பிடிக்க முடியவில்லை இதைக் கண்ணுற்றுக் கொண்டு நின்ற அப்பா தான் அணிந்திருந்த சட்டையைக் கழற்றி நீரில் அமிழ்த்தி நான்கு மீன்களைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்துக் காட்டினார். அதன் பின் அவ்வாறு நாங்களும் மீன் களைப் பிடித்து விளையாடினோம்.

அம்மா துணிகளைக் கழுவி வயல் வரம்பில் காயவிட்டார். பின் அப்பாவும் அம்மாவுமாக குளத்தில் நீராட இறங்கினார்கள்.

அம்மா ஆழம் குறைந்த நீரில் நின்று நீராடினார். அப்பா நீந்திச் சென்று நடுக்குளத்தில் நின்று நீராடினார். கோவிலில் ஆயத்த மணி அடித்துக் கேட்டது.

"வாருங்கள் போவோம், கோவிலில் பூசை தொடங்கப் போகின் றது" என்று அம்மா குரல் கொடுத்தார்.

அவ்வளவுதான்; அப்பா கையில் சில தாமரைப் பூக்களுடன் கரைக்கு வந்தார். நாங்கள் மூவரும் உடைகளை மாற்றிக்கொண்டு கோவிற் பூசை காணச் சென்றோம்.

❋ ❋ ❋

# எனது சிறிய தோட்டம்

நான் பட்டணத்தில் வசிக்கும் மாணவன். எனது வீடு அமைந் திருக்கும் காணி மிகச் சிறியது. வீடு, கிணறு, மலகூடம் இருக்கும் இடங்கள் போக மிகுதியான நிலத்தில், நான் ஒரு தோட்டம் அமைக்க விரும்பினேன். எனது விருப்பத்தை அப்பாவுக்கு எடுத்துக் கூறினேன். அப்பாவும் அதற்குச் சம்மதம் தெரிவித்தார்.

நான் எங்கள் வீட்டுக் காணியில் கிடந்த இலை, குழைகளை ஒன் றாகக் கூட்டி எடுத்து வெறும் நிலத்தில் பரப்பிக் கொத்தினேன். நிலம் தூர்வை அடைந்தது. பின்புற வயல் நிலத்தில் கிடந்த சாணி களையும் எடுத்து வந்து கொத்திப் பண்படுத்திய நிலத்தில் பரவி னேன். அதைக் கண்ணிற்ற அப்பா திரும்பவும் ஒரு முறை கொத் தும்படி கூறினார். திரும்பவும் கொத்தி மட்டமாக்கினேன். மறுநாள் அப்பா பதினைந்து கத்தரிக் கன்றுகளும் பதினைந்து தக்காளிக் கன்று களும் வாங்கி வந்து, சிறு சிறு பாத்திகள் செய்து கன்றுகளை நாட்டி விட்டார். முற்றத்தில் நின்ற கொய்யா மரக் கிளைகளை வெட்டி எடுத்து கன்றுகளுக்கு நிழலிட்டார். கன்றுகளுக்கு நீர் ஊற்றும் வேலையை மட்டும் என்னிடம் ஒப்படைத்தார். அதைத் தொடர்ந்து நான் ஒழுங்காகச் செய்து வருகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளவு வேலிக்கரையில் பயற்றம் விதைகளை நாட்டினார். பகற்றம் கொடிகள் வேலிகளில் படர்ந்து வருகின்றன. வெகு விரைவில் அவை பூத்துக் காய்க்குமென அப்பாவும் அம்மாவும் கூறுவார்கள். அவர்களின் வார்த்தையைக் கேட்டதும் நான் துள்ளிக் குதிப்பேன். தினமும் காலையிலும் மாலையிலும் நான் தோட்டத்தை சென்று பார்வையிடுவேன். பாத்திகளில் ஒரு புல்லுக் கூட வளரவிட மாட்டேன். வெண்டி, மிளகாய், வெங்காயம் போன்ற பயிர்களையும் செய்கை பண்ண வேண்டுமென்பது என் ஆசை. அதற்கு நிலம் இல்லையே! என் செய்வேன், இதுதான் பட்டின வாசமென நினைந்து கவலை அடைகின்றேன். கிராமத்தில் வாழ்ந்தால் போதியளவு நிலம் பெற்று பெரியளவில் தோட்டம் செய்யலாம். ஆனால் எனது காணியில் நிற்கும் கத்தரியும் தக்காளியும் நன்கு காய்த்தால் எங்கள் வீட்டுத் தேவைக்கு உதவும் தானே! அதுவே போதும்.

* * *

# நான் வளர்க்கும் பூனைக்குட்டி

நான் வளர்க்கும் பூனைக்குட்டி மிகச் சிறியது. வெள்ளையும் கறுப்பும் கலந்த பஞ்சுபோன்ற மேனியை உடையது. பூனைக் குட்டிக்கு பால் கொடுத்து வளர்த்து வருகின்றேன். பந்தை உருட்டி விட்டால் அது தன் முன்னங்கால்களால் அதைத் தட்டி விளையாடும். என்னைக் கண்டால் "மியா மியா" என்று கத்திக்கொண்டே என் பின்னால் ஓடிவரும்.

அதைத் தூக்கி நான் முத்தமிடுவேன். அம்மா நான் முத்தமிடுவதைக் கண்டால் எனக்கு ஏசுவார். "பூனைக்குட்டியின் மயிர் வயிற்றுக்குள் போனால் நோய் ஏற்படும்." என்று அடிக்கடி கூறுவார். ஆனால் நான் பூனைக்குட்டியை சதா தூக்கி விளையாடி மகிழ்வேன்.

எலியைக் கண்டால் அதைப் பிடிக்க துரத்திச் செல்லும். எலி ஓடி மறைந்துவிடும். ஒரு நாள் நான் பாடசாலையால் வந்தபொழுது பூனைக்குட்டியைக் காணவில்லை. எங்கும் தேடிப் பார்த்தேன். கண்டு பிடிக்க முடியவில்லை. மனக் கவலையுடன் மதிய உணவைக்கூட உண்ணாமல் இருந்தேன். மாலை ஆறுமணியாகிவிட்டது. பக்கத்து வீட்டில் பூனைக்குட்டு ஒன்று கத்தும் சத்தம் கேட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கை மீனாவை அழைத்து, பக்கத்து வீட்டில் பூனைக்குட்டி அழும் சத்தம் கேட்கிறது. பார்த்து வரும்படி கூறினேன்.

அவள் அங்கே சென்று பூனைக் குட்டியைப் பார்த்தாள். அது தான் வளர்க்கும் பூனைக்குட்டிதான் என்பதைக் கண்டுகொண்டாள்.

உடனே அவள் ''எமது பூனைக் குட்டி இங்கே நிற்கிறது. ஓடி வா'' என்று உரத்துக் கத்தினாள். நானும் சென்று இருவருமாகப் பூனைக்குட்டியைப் பிடித்து வந்தோம். அதன் பின்பே எனது மதிய உணவை உண்டேன்.

அம்மா என்னைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தார். அம்மாவுக்குத் தெரியுமா என்ன, நான் அந்த பூனைக்குட்டியில் வைத்திருக்கும் பாசம்!

❊ ❊ ❊

# நாய் தன் கதை சொல்கிறது

''நீ என்னோடு விளையாட வரமாட்டாயா?'' ''நானா தம்பி? எனக்கு நோயும் வயோதிபமும் ஒன்றாகப் பிடித்து விட்டது. என்னால் நடமாடவே முடியாது. இன்னும் எத்தனை நாளைக்கு உயிரோடு இந்த வீட்டில் வாழப் போகிறேனோ தெரியாது. வேறு ஒரு நாய்க்குட்டியைப் பிடித்துவந்து அதோடு சேர்ந்து விளையாடு. என் உடம்பில் உள்ள குட்டைநோய் உனக்கு சிலவேளை தொற்றிவிடும். நீ என்னோடு உரையாடுவதைக் கண்டால், உனது அம்மா அடிப்பா போய்விடு'' என்றது நாய்.

''ஏன் அப்படி அம்மாவை சொல்லுகிறாய்? அவதானே நான் குழந்தையாக இருக்கும் பொழுது உன்னைக் கொண்டுவந்து தந்தவ. அன்று உனக்கு பாலும் சோறும் தந்து வளர்த்தவ''

''உண்மை தம்பி. அது ஆறு வருடங்களுக்கு முன் நிகழ்ந்தது. அன்று நான் குண்டனாகவும் மிக அழகாகவும் இருந்தேன். என் தாய் உனது சின்னம்மா வீட்டில் நின்றா. அவ என்னுடன் நான்கு குட்டிகளை ஈன்றா. அதில் நான் மட்டும் தான் ஆண். என்னைக் கண்ட உன் அம்மா சின்னம்மாவோடு வாதாடி என்னை எடுத்து வந்து உன்னிடம் தந்தா. அன்றிலிருந்து அவ என்னை அன்பாகத் தான் வளர்த்து வந்தா. நீயும் தூக்கி விளையாடினாய். உனக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரும் இன்சுவை பண்டங்களில் ஒரு பங்கினை எனக்கும் தந்து வந்தாய். இடைக்கிடை மாமிசமும் வேகவைத்து எனக்குத் தந்தவதான். நானும் நன்றிக் கடனாக உங்கள் வீட்டைக் காவல் காத்து வந்தேன். வீட்டுக்கு வரும் வேறு நாய்களும் பூனைகளும் காகங்களும் நான் குரைக்கும் சத்தத்தைக் கேட்டதுமே நடுநடுங்கி ஓட்டமெடுத்தன. அப்பொழுது உங்கள் வீட்டார் ''நாயென்றால் இதுவல்லவோ நாய்'' என்று பாராட்டிப் புகழ்ந்து பேசினர்.

''இன்று......'' அதற்குமேல் நாய் பேசவில்லை.

''ஏன் நிறுத்தி விட்டாய்'' என்று சிறுவன் கேட்டான்.

''தம்பி நீயே பார்க்க உனது அம்மா என்னைக் கண்டாலே காலால் உதைக்கிறா. தடியாலே அடிக்கிறா, கல்லெடுத்து எறிகிறா. உணவைக் கொண்டுவந்து இந்த மண் நிலத்திலே வேண்டா வெறுப்புடன் கொட்டிவிட்டுப் போகின்றா, மற்றும் வீட்டில் உள்ளோரும் என்னைக் கண்டதும் இப்படித்தானே நடந்து கொள்கின்றார்கள். நீ மட்டும் குழந்தை என் மீது உள்ள பாசத்தால் இப்படி நடந்து கொள்கிறாய். என்னோடு பேசிக் கொண்டிருப்பதை அம்மா கண்டால் அடிப்பா. நீ போய் விடு.''

* * *

# விளையாடுவோம்

நாம் சிறுவர்கள்; கல்வி கற்பவர்கள். எமக்கு கல்வி எப்படியோ அப்படியே விளையாட்டும் அவசியமானது. விளையாட்டால் உடல் வளர்ச்சியடைகின்றது. தசைநார்கள் வலுப்பெறுகின்றன. எம்மிடையே ஒற்றுமை வலுப்பெறுகின்து மற்றவர்களுடன் சேர்ந்து பழக வாய்ப்பு ஏப்படுகின்றது. உண்மை பேசி வாழவேண்டும் என்ற பண்பைக் கற்றுக்கொள்கின்றோம்.

மாணவர்களாகிய நாங்களே இந்நாட்டின் எதிர்கால மனிதர்கள். நாமே இந்த நாட்டின் சகல பொறுப்புக்களையும் ஏற்று வழிநடத்த வேண்டியவர்கள். அதற்குரிய வழிமுறைகளை விளையாட்டில் இருந்தே இளமையில் கற்றுக் கொண்டால் நாம் மதிப்புக்குரியவர்களாக வாழமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை மறந்து வெற்றியை மட்டுமே கருத்திற்கொண்டு போட்டி பொறாமையை வளர்த்துக் கொண்டால் எம்மிடையே ஒற்றுமை வலுப்பெறாது. விளையாட்டுக் கழகங்களிடையே சண்டைகள் ஏற்பட்டு மோதல்கள் நிகழ்ந்தால் விளையாட்டு மைதானங்களே யுத்த களங்களாக மாறிவிடுகின்றன.

இத்தகைய நிலை உலக விளையாட்டு அரங்குகளிலும் இடம் பெறுவதை நாம் அறிகின்றோம். இத்தகைய செயல்கள் ஏற்படாதவாறு பார்வையாளர்களும் விளையாட்டு வீரர்களும் தங்களைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும்.

மைதானத்துக்கு விளையாட்டுகளைப் பார்க்க வருபவர்கள் தமது பொழுதை சிறிது நேரம் அகமகிழ்வாகக் கழிக்கவே வருகின்றனர். ஆனால் அங்கு அவர்கள் மனம் வருந்தி வீடுகளுக்குத் திரும்புதல் வேதனைதரும் செயலாக அமைகிறது. ஒரு சில விளையாட்டு மைதானங்களிலே நடுவர்கள் நையப்புடைக்கப்படுகின்றனர்.

சகோதரத்துவத்துடன் தோல்வியை ஏற்றுக் கோள்ளும் மனப் பக்குவத்தை விளையாட்டு வீரர்களும் பார்வையாளரும் நன்குபுரிந்து நடந்துகொள்ளும் நாளே ''கூடி விளையாடு'' என்ற பாரதியின் வாக்கு நிறைவு பெறும் நாளாகும்.

* * *

# அன்பு

''அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்பு தோல் போர்த்தவுடம்பு''.

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் திருவள்ளுவர் அன்புடைமை அதிகாரத்தில் கூறி வைத்துள்ள குறள் இது. அன்பின் வழி நின்ற உடம்பே உயிர்நின்ற உடம்பு. அந்த அன்பு இல்லாதார்க்கு உள்ள உடம்புகள் எலும்பினைத் தோலாற் போர்த்தன வாகும். உயிர் உடையன ஆகாது.

எவன் ஒருவன் தன்னை நேசிக்கிறானோ அவன் மற்றைய உயிர்களையும் நேசிப்பான். உள்ளத்தில் கருணை படைத்தவன் தான் நடமாடும் இடமெல்லாம் காணும் உயிர்களை நேசிப்பான். அன்பு காட்டி உறுதுணை புரிவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பே கடவுள். அன்புடையார் பிறர்க்கு வரும் துன்பத்தை தனக்கு வந்த துன்பமாகக் கருதுவார்கள். துயர் கண்ட இடத்தில் மனத்தூய்மையுடன் நின்று செயற்படுவார்கள். ஆறுதல் கூறி தம்மால் இயன்ற உதவிபுரிவார்கள். பிறருக்கு உதவுவதினாலேயே ஆண்டவனின் அருளைப் பெறலாம்.

சமூகத் தொண்டர்களாக நின்று உழைப்பவர்கள் மனத்தூய்மையும் ஜீவகாருண்ணியமும் உடையவர்களாக வாழவேண்டும். அதைவிடுத்து சுயநலப்பற்றை உள்ளத்தில் வைத்துக்கொண்டு பட்டம் பதவிகளைத் தேடிக்கொள்வதற்காக போலி அன்பைக் காட்டி வாழ்பவர்களால் சமூகம் நற்பலனைப் பெறமுடியாது. என "அன்பிலாரெல்லாந் தமக்குரியரன்புடையரென்பு முரியர் பிறர்க்கு" என்னும் திருக்குறள் மூலம் வள்ளுவர் பெருமானே மிக ஆணித்தரமாகக் கூறிவைத்துள்ளார்.

இதனால் நாம் ஒன்றை நன்கு அறிந்து கொள்ளலாம். அன்புடையவர்கள் பிறர்க்குரியவர்கள். அன்பு இல்லாதவர்கள் என்றும் தமக்கே உரியவர்கள் இவர்கள் சுயநலவாதிகள். இவர்களது நினைவுகளும் செயல்களும் தன்னலம் மிக்கனவாகவே அமையும்.

அன்புடையார் தாம் காணும் துன்பத்திலும் இன்பம் காண்பர். இறுதி மூச்சுள்ளவரை பிறவுயிர்களை நேசித்து தானும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழவைப்பர்.

* * *

# முற்றத்து "றோசா"

எனது முற்றத்தில் இன்று நின்று பூத்துக் குலுங்கும் றோசா மரம் பார்ப்பவர்களது உள்ளத்தைக் கவர்கின்றது. பார்ப்பவர்கள் "இந்த றோசாவை எங்கே எடுத்தீர்கள்" என்று சதா எங்கள் அப்பாவைக் கேட்காமல் விடுவதில்லை. இது எண்ணற்ற பூக்களைக் கொண்டுள்ளது. பூக்கள் மிகப் பெரியவை. வாசனை மிக்கவை; நல்ல இளஞ்சிவப்பு நிறமுடையவை. மூன்று வருடங்கள் நிரம்பிய இம்மரம் முற்றத்தின் வெளியில் மூன்றில் ஒரு பங்கை நிரப்பி நிற்கின்றது.

நான் காலை எழுந்ததும் றோசா மரத்தைச் சென்று பார்வையிடுவேன். அதன் கீழ் காய்ந்து உதிர்ந்து விழுந்து கிடக்கும் பூக்களின் இதழ்களையும், இலைகளையும் கையால் பொறுக்கி எடுப்பேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூக்கள் உதிர்ந்த தண்டுகளைச் செடியில் இருந்து வெட்டி எடுத்து அழகுற வைப்பேன. ஒரு சிறு பூச்சிகூட இலைகளில் காணவிடமாட்டேன். இருவாரத்துக் கொருமுறை பூச்சி நாசினி விசிறிச் செடியைப் பாதுகாப்பேன்.

முட்டைக் கோது, தேயிலைச் சக்கை, காய்ந்த எரு என்பன வற்றை பசளையாக இடுவேன்.

அம்மா தினமும் மூன்று பூக்களை எடுத்து சாமிப்படத்திற்கு வைப்பார். வைபவங்களுக்குச் செல்லும்போது றோசாப் பூவைப் பறித்து தனது கொண்டையில் சூடிக் கொண்டு செல்வார். அம்மா சூடிச் செல்வதைக் கண்ணுற்ற அயலவர்களும் எப்பொழுதும் பூ கேட்டு எமது வீட்டுக்கு வருவார்கள். அதனால் முற்றத்தில் நிற்கும் றோசா எங்களது கிராமத்தின் மத்தியில் வளர்ந்து நிற்கும் பொது றோசாவாகவே கருதப்படுகின்றது.

நாளுக்கு நாள் பூ கேட்டு வருபவர்களைச் சமாளித்து அனுப்புவது அம்மாவுக்கு ஒரு தொல்லையாகவே உருப்பெற்று வருகின்றது. எனது முற்றத்து றோசாச் செடி எனக்கு எந்நாளும் ஆனந்தத்தைத் தந்து நிற்கின்றது.

* * *

# மாலைப்பொழுது

சூரியன் தன் கதிர்களை மடக்கிக் கொண்டு மேற்குத்திசை அடிவானை நோக்கி மெல்ல மெல்லச் சென்றுகொண்டிருந்து. வானம் செந்நிறமாகக் காட்சி கொடுத்தது.

மீனவர்கள் தங்களது தோணிகளை எடுத்துக்கொண்டு கடலிற் செல்ல ஆயித்தமாயினர்.

கடற்கரையில் ஒரே ஆரவாரம். வீச்சுவலையில் பகல் தொழிற் செய்து மீன் பிடித்தவர்கள் கரைவந்து சேர்ந்தனர். அவர்கள் கொண்டுவந்த மீன்களை வாங்க அங்கு நின்றோர் முந்தியடித்துக் கொண்டு அவர்களை நோக்கிச் சென்றனர்.

கலவாய், கயல், விளை, பாரை, மணலை எனப் பலவகைப்பட்ட மீன்கள் காணப்பட்டன. மீன்களைக் கண்ட அப்பா ஐம்பது ரூபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்து ஒரு கயல் மீன் வாங்கினார். "நாம் இனி இங்கே நிற்கக் கூடாது; மீனைக் கொண்டு வீட்டுக்குப் போவோம்" என்று அப்பா என்னைப் பார்த்துக் கூறினார்.

"சரி" என்றேன். இருவருமாக மெல்ல வீட்டை நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தோம்.

பறவைகள் இனமினமாக சத்தமிட்டுக் கொண்டு தங்களது கூடுகளை நோக்கிப் பறந்து கொண்டிருந்தன. பகலில் மேய்ச்சலுக்குச் சென்ற மந்தைகள் கூட்டம் கூட்டமாக தங்களது தொழுவங்களை நோக்கிச் சென்றன.

கூலிவேலைக்குச் சென்றோர் தமக்குக் கிடைத்த பணத்தைக் கொண்டு கடைகளில் பொருள்களை வாங்கினர்.

தெருவிளக்குகளை ஒருவர் பற்றவைத்துக் கொண்டு சென்றார்.

வீதியின் இரு மருங்காலும் தத்தம் வேலைகளுக்குச் சென்றோர் தங்களது வீடுகளை நோக்கி ஓட்டமும் நடையுமாகச் சென்று கொண்டிருந்தனர்.

நானும் அப்பாவும் எமது வீட்டுவாசலைச் சென்றடைந்த அவ்வேளை பொழுதும் கருகி இருளாகி விட்டது. அம்மாவும் வீட்டுக்கு விளக்கேற்றிக் கொண்டிருந்தார்.

* * *

# வீட்டு வேம்பு

வேம்பு ஒரு மூலிகை விருட்சம். சதுப்பு நிலமற்ற எந்த வறண்ட நிலத்திலும் வளரும் தன்மையுடையது. எங்களது குடியிருப்புக் காணிகளில் சுயமாகவே காணப்படுகின்றது. இதன் உற்பத்தியில் மனிதர்களாகிய நாம் சிறிதளவு நாட்டம் கொண்டால் அதிகளவில் வேப்ப மரங்களை உற்பத்தியாக்கலாம்.

இன்று மரநடுகையை ஊக்குவிக்கும் பொது அமைப்புக்கள் வேப்ப மரங்களை நாட்டுவதில் அதிக கவனம் செலுத்தி வருகின்றன. வேம்பு பெரிய விருட்சமாக வளரும். பல்வேறு வகைகளில் உபயோகமாகின்றது. உற்பத்தியாக்க சிறு முயற்சியே போதுமானது. வேறு பயிர்களை உற்பத்தியாக்க முடியாத நிலங்களிலும் வேம்பை உற்பத்தியாக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேப்பம் பூ, விதை, இலை, கிளை, மரம், மரப்பட்டை என்பன எமது தேவைகளுக்கு உபயோகமாகின்றன.

பூ மருந்துத் தேவைகளுக்கு எடுக்கப்படுகின்றது. வேப்பம் பூ வடகம் உணவுடன் சேர்த்து உண்ணப்படுகின்றது. வேப்பமிலையை எம் நாட்டு வைத்தியர்கள் பச்சிலை மூலிகையாக பல்வேறு நோய்களுக்கு உபயோக்கின்றனர். பசளையாகவும் தோட்ட நிலத்தில் புதைக்கப்படுகின்றது. நுளம்பின் தொல்லையைப் போக்க வேப்பிலை, வேப்பம் விதை புகைக்கப்படுகின்றது. இவை சிறந்த கிருமி நாசினியாகும். விதையில் இருந்து எடுக்கப்படும் எண்ணெய் பல்வேறு நோய்களுக்கு மருந்தாகின்றது. வேப்பம் பட்டைத் தண்ணீர் உடல் நோவையும் உட் புண்களையும் மாற்றுகின்றது. கசாயம் முறைக் காய்ச்சலை மாற்றுவதுடன் குடற் பூச்சிகளையும் அகற்றும் தன்மை வாய்ந்தது.

வேப்பமரப் பலகை மிக உறுதியானதும் நீண்ட கால பாவனைக்கு உகந்ததுமாகும். விறகுத் தட்டுப்பாடான இக்காலகட்டத்தில் வேப்ப மரத்தை பலர் விறகுக்காக உபயோகப்படுத்துகின்றனர். இதனால் பாரிய வேப்ப மரங்கள் வெட்டி எடுக்கப்படுகின்றன. ஒன்றை வெட்டினால் அந்த வெற்றிடத்தில் பல வேப்பங்கன்றுகளை நாட்ட வேண்டும்.

வேப்பம் காற்று சுகத்துக்கு மிக உகந்தது. மனிதர்கள் ஒவ்வொருவரும் ஒரு வேப்பம் கன்று நட்டுப் பாதுகாத்தால் பல்லாயிரம் கன்றுகள் எமது பிரதேசத்தில் காட்சி கொடுக்கும். வேப்ப மரங்ககளைக் கன்றாகவும் நாட்டலாம். விதைகளை நாட்டியும் உற்பத்தி செய்யலாம். ஆகக் குறைந்தது வீட்டுக்கொரு வேம்பு நட்டு நாட்டுக்கு நல்லது செய்வோம்.

* * *

# எனக்குக் கிடைத்த புதிய புத்தகம்

அக்கா ஆறாம் வகுப்பில் படித்தாள். அவளிடம் பல புத்தகங்கள் இருந்தன. அப்பொழுது எனக்கு வயது மூன்று. அக்காவின் புத்தகங்கள் அடுக்கியிருந்த மேசை மேல் ஏறி அந்தப் புத்தகங்களைப் படிக்க வேண்டுமென்ற ஆசை எனக்கு ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்தில் இருந்த கதிரையில் ஏறி ஒரு நாள் அக்காவின் புத்தக மேசையில் குந்தியிருந்து, புத்தகங்களை எடுத்து விரித்துப் பார்த்தேன்.

பல நிறப் படங்கள் அவற்றில் காணப்பட்டன. அவற்றைப் பார்த்து மனமகிழ்ந்தேன். ஒன்றை எடுத்து விரித்துப் பார்த்தேன். அது சமயப் புத்தகம். கோவில் முகப்பு முதல்பக்கத்தில் காணப்பட்டது. மற்றைய பக்கங்களையும் திருப்பிப் பார்த்தேன், முருகன், பிள்ளையார், சிவபெருமான், உமாதேவியார் எனப் பல வர்ணப்படங்கள் அதில் இருந்தன.

முருகனின் உருவப்படத்தின் மேல் எனக்கு ஆசை உண்டானது. மெல்ல அந்தப் புத்தகத்தை கையில் எடுத்துக்கொண்டு சமையல் வேலையிலிருந்த அம்மாவிடம் சென்றேன்.

அந்த முருகன் படத்தை நான் விளையாடுவதற்கு தரும்படிகேட்டேன். அம்மா அதைக் கழற்றித்தர மறுத்தார். நான் உரத்து அழுதேன். அம்மா எனக்கு அடித்தார். அடித்ததும் நான் திரும்பவும் உரத்துக் கத்தி அழுதேன்.

அந்நேரம் அப்பா கந்தோரிலிருந்து வீடு நோக்கி வந்தார். எனக்கு அடி விழுந்த விபரத்தை அறிந்துகொண்ட அப்பா, ஒன்றும் பேசமலே வீட்டில் இருந்து புறப்பட்டுச் சென்றார்.

அரைமணி நேரம் சென்றிருக்கும்; அப்பா மறுபடியும் வீட்டுக்கு திரும்பி வந்தார்.

அவர் கையில் ஒரு புதிய புத்தகம் காணப்பட்டது.

''என்னப்பா புத்தகம்'' என்று கேட்டேன்.

''பாப்பா உனக்குத்தான்'' என்று கூறியவாறு புத்தகத்தை நீட்டினார்.

நான் வாங்கி விரித்துப் பார்த்தேன். அத்தனையும் முருகனின் திரு உருவங்களைக் கொண்ட படப் புத்தகம்.

அப்பா என்னை வாரி முத்தம் தந்தார். நான் அப்பாவின் இரு கன்னங்களிலும் மாறி மாறி முத்தங்கள் கொடுத்தேன்.

❋ ❋ ❋

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமத்தில் ஒரு வாரம்

மார்கழி மாத விடுமுறை காலம். ஒரு நாள் பெரியம்மாவின் மகன் எனது வீட்டுக்கு வந்தார். அன்று பிற்பகல் தனது வீட்டுக்குப் போகும்போது என்னையும் தன்னுடன் வரும்படி கேட்டார். நானும் அம்மாவின் சம்மதம் பெற்று பெரியம்மாவின் வீட்டுக்குச் சென்றேன்.

இரவு வேளை ஆகிவிட்டது. அவர்களது வீட்டில் சாப்பிட்டு விட்டு படுத்து உறங்கிவிட்டேன். காலைச்சேவல் கூவியது. அவர்கள் எல்லோரும் எழுந்து கல, கல என்று கதைக்கும் சத்தம் கேட்டது. நானும் படுக்கையைவிட்டு எழுந்து காலைக் கடன்களை முடித்தேன்.

''நாங்கள் கிராமத்தவர்கள். எங்களுக்கு விடிந்தால் தோட்டத்தில் வேலை அதிகம் உண்டு; தம்பி அப்பாவுடன் தோட்டத்திற்குப் போகப் போகிறான். சந்திரன் நீயும் விரும்பினால் தம்பியுடன் போய்வா'' என்று பெரியம்மா கூறினார். நானும் அவர்களுடன் போகச் சம்மதித்தேன்.

பெரியம்மா எங்களுக்கு தேநீர் தந்தார்.

பெரியப்பா கடகமும் மண்வெட்டியும் எடுத்துக்கொண்டு புறப்பட்டார். நாங்கள் இருவரும் அவர்பின்னால் சென்றோம். பெரியம்மாவின் வீட்டில் இருந்து தோட்டம் கிழக்குப் பக்கமாக கால்மைல் தூரத்தில் இருந்தது. அங்கு எங்கு பார்த்தாலும் நிலம் பச்சைப் பசேல் எனக் காட்சி தந்தது. மரங்கள், செடிகள், கொடிகள், மரக்கறி வகைகளாகக் காணப்பட்டன.

கிணற்றடியில் சிறிய கொட்டில் ஒன்று இருந்தது. அங்கே பசுமாடுகளும் ஆடுகளும் குழை தின்று கொண்டு நின்றன. பெரியப்பா கடகத்துக்குள் இருந்த வாளியை எடுத்து ஆடு, மாடுகளில் பால் எடுத்தார்.

சுகுமார் மண்வெட்டியை எடுத்து நாலு மரவள்ளித் தடியைப் பிடுங்கியெடுத்தான். தடிகளைச் சுற்றிவரக்கிழங்கு. ''இதைக் கொண்டு போய் அம்மாவிடம் கொடுத்துவிட்டு வருகிறேன்'' என்று கூறியவன் வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

''சுகுமார் இங்கே வா'' என பெரியப்பா கூப்பிட்டார். ''அதோ இரண்டு தேங்காய் விழுந்து கிடக்கிறது. அதையும் கிழங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னையும், நானு தேசிக்காயையும் பிடுங்கிக் கொண்டு போய் அம்மா விடம் கொடு'' என்றார். அவனும் அப்படியே செய்தான்.

நாம் இருவரும் வீட்டுக்குப் போனோம். அங்கு காலை உணவாக சர்க்கரையும் தேங்காய்ப் பூவும் கலந்து அவித்த குரக்கன் மா பிட்டை பெரியம்மா இருவருக்கும் சாப்பிடத் தந்தார்.

சிறிது நேரம் முற்றத்தில் இருவரும் விளையாடினோம். நேரம் பத்து மணி. சீனிப்பனாட்டும் மோரும் தந்தார். நீங்களும் பெரியப் பாவும் தோட்டத்திற்குக் கொண்டுபோய்ச் சாப்பிடுங்கள் என்றார். நாங்கள் திருப்பவும் தோட்டத்திற்குச் சென்றோம்.

இப்படியே தோட்டம். வீடு, விளையாட்டு, விதம் விதமான சாப்பாடு எனப் பொழுது போனதே தெரியவில்லை ஒரு வார காலம் ஓடிமறைந்தது. நான் வீடுவந்து சேர்ந்தேன். எப்பொழுது பாடசாலை விடுமுறை வரும்; பெரியம்மா வீடு போய் கிராமத்து இயற்கை அழகை அனுபவிப்பேன், என்ற நினைப்பு என் உள்ளத்தில் வளர்ந்து கொண்டே இருக்கிறது.

* * *

# அன்னை திரேசா

திக்கற்றவர்களுக்குத் துணை நிற்பதனால் ஆண்டவனை அடைய லாம் என்ற மனத்துடன் தொண்டாற்றுபவரே அன்னை திரேசா.

இவர் 1910 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27 ந் திகதி அல்பேனிய நாட்டில் ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். பன்னி ரண்டு வயதுப் பராயத்திலிருந்தே குடும்ப பந்த பாசங்களை நீக்கி, தேவமைந்தன் இயேசு சொல்லிச் சென்ற வாழ்க்கை நெறியில் வாழ வேண்டும் என்ற இலட்சிய தீபம் இவரது உள்ளத்தில் சுடர் விடத் தொடங்கியது.

நாடு மறந்து, நலம் மறந்து, கிறிஸ்துவம் பரப்ப இந்தியா வந் தடைந்தார். 1929 ஆம் ஆண்டு கல்கத்தா என்டெலி புனித மரியன்னை உயர்நிலைப் பள்ளியில் புவியியல் ஆசிரியையுமாகி லொரெட்டோ கன்னியர்மடத்தின் உறுப்பினரும் ஆனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பமான சகல வசதிகளும் நிரம்பிய சூழலில் வாழ்வதினால் பசித்தவர்களுக்கும், அனாதைகளுக்கும், விதவைகளுக்கும், சிறுவர்களுக்கும், வயோதிபர்களுக்கும், தொழுநோயாளர்களுக்கும் சேவையாற்றமுடியாது என்பதை உணர்ந்தார்.

ஒரு சில மாணவிகளைப் பயிற்றியெடுத்தார் தன்னைப் பின் தொடரவைத்தார். முழுநேர சேவகியாக மாறி கல்கத்தாவின் தெருவிலும், திண்ணையிலும், சேரியிலும், வடிநீர் வாய்க்கால்களிலும் உயிர்காக்க ஊசலாடிய மனிதர்களை எடுத்துவந்து வாழவைக்கத் தொடங்கினார். எண்ணற்றோர் இவரது பாதச்சுவடுகளைப் பின்பற்றி துணைபுரிய முன்வந்தனர். பல மடங்களை நிறுவி தொடர்ந்து இந்தியாவின் பல பாகங்களிலும் தன் அளப்பெரிய சேவையை புரிந்து வருகிறார்.

இவரது தன்னலமற்ற தியாக சேவையினால் பல பரிசுகளைப் பெற்றதுடன் நோபல் பரிசும் பெற்றுள்ளார்.

அன்பு, பாசம், பரிவு, தியாகம் கொண்ட அன்னை திரேசாவின் சேவை அளப்பெரியது. அவர் சேவைக்கு அவரே நிகர்.

நாமும் அவர் வழியில் சேவைபுரிய முயல்வோம்.

* * *

# பகிர்ந்து வாழ்வோம்

மனிதன் வாழ உழைக்கின்றான். உழைப்பால் கிடைப்பதைக் கொண்டு நாம் எப்படி வாழப் பழகிக்கொள்ள வேண்டுமென்பதையே எமது மூதாதையர்கள் ''இட்டு, உண்டு, இரு'' என மூன்று வார்த்தைகளில் இரத்தினச் சுருக்கமாகக் கூறிவைத்துள்ளனர்.

இட்டு — அதாவது பிறருக்கு கொடுத்து, நீயும் உண்டு வாழ்

தருமம் தலைகாக்கும்; அறவழியால் பொருளைத் தேடவேண்டும். தேடிய பொருளைக்கொண்டு தனது குடும்பத்தை சீராகப் பேணிக் காக்கவேண்டும். மற்றவருக்கும் தானம் செய்யவேண்டும்.

''தனக்குக் கண்டு தானம் வழங்கு'' என்பது ஆன்றோர் மொழி. ஒரு சிலர் பெயருக்கும் புகழுக்காகவும் கடன்பட்டே தானம் செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றார்கள். கடன்காரன் வீடுதேடி வரும்பொழுது அவமானச் சொற்களுக்கு ஆளாகின்றனர். சில வேளை ஓடி ஒழித்துக்கொள் கின்றனர். எனவே தானம் செய்யவும் வேண்டும்; அது இயல்புக் கேற்றதாகவும் இருக்கவேண்டும்.

தானம் பெறுபவர்களது உண்மை நிலைமை அறிந்தே பிச்சை கொடுக்கவேண்டும். அதனையே ''பாத்திரமறிந்து பிச்சை இடு'' என்று பழமொழியாளர் கூறி வைத்துள்ளனர்.

சிலர் உழைக்க வலுவிருந்தும் சோம்பேறிகளாக பிறரை அண்டி வாழ்வதையும் நாம் காண்கின்றோம். அன்ன சத்திரங்களில் உண்டு' உறங்கி வாழ்பவர்கள் இல்லாமல் இல்லை. இவர்களைப் பார்த்து பரிதாபப்படலாமே யொழிய பேசிப் பலனில்லை.

ஆபத்து வேளைகளில் அனாதைகளாக வருபவர்களை வரவேற்று உண்டி கொடுத்து ஆதரவு செய்வது தலைசிறந்த தானமாகும். அதனாலேயே ''உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்'' எனவும் மூதாதையர்கள் கூறி வைத்துள்ளனர்.

அன்பே கடவுள். அவனது படைப்பே உயிரினம். அவற்றுள் மனி தனே, மேலான பிறவி. அந்தப் பிறப்பைப் பெற்ற நாம், உயிரினத் துக்கு ஆதரவு காட்டப்படவேண்டியது பெருங்கடமை.

கடமையைச் சரிவரச் செய்யாமல் பணத்தைப் புதைத்து வைப் பதில் எதுவித பலனும் கிடையாது. ஆகவே வாழும் காலத்திலேயே எம்மால் இயன்றளவு பிறருக்கும் உதவிசெய்து வாழவேண்டும் என் பதை வலியுறுத்தவே ''இட்டு உண்டு இரு'' என அறிவுரை கூறி வைத்துள்ளனர். இதை நாம் உணர்ந்து செயற்பட்டால் பிறவியின் பயனை அடைவோம்.

* * *

# அண்ணா கண்ட கனவு

நடு இரவு. எங்கும் நிசப்தம். அம்மாவுடன் உறங்கிக் கொண் டிருந்தேன். பக்கத்து கட்டிலில் அண்ணா உறங்கிக் கொண்டிருந்தார்.

''ஐயோ அம்மா! அம்மா!'' என்று அண்ணா பலமுறை குரல் எழுப்பினார். அம்மாவும் நானும் விழித்துக் கொண்டோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்ன மகனே சுதா! ஏன் கத்துகிறாய்?'' என்று கேட்டவாறே விளக்கைத் தூண்டினார்.

அண்ணா குரல் எடுக்க முடியாது உடலெல்லாம் வியர்த்துக் கொட்ட கட்டிலில் குந்திக்கொண்டிருந்தார்.

''மகனே! நான்தானடா உன் அம்மா! தம்பியும் எழுந்து நிற்கின்றான். ஏன் பயந்து நடுங்குகின்றாய்? சொல்லு ஏதாவது கனவு கண்டாயா? என்று கேட்டார்.

அண்ணா பேச எத்தனித்தார். ஆனால் அவரால் பேச முடியவில்லை. வலக்கரத்தைத் தூக்கி யன்னற் பக்கமாக நீட்டினார்.

''கள்வரா வந்தார்கள்?'' என அம்மா திரும்பவும் கேட்டார். அண்ணன் மெல்ல எழுந்து தனது இரண்டு கரங்களாலும் அம்மாவை இறுகக் கட்டிப்பிடித்துக் கொண்டார்.

என்னால் என்ன செய்வதென்றே தெரியவில்லை. எனக்கு பயமாகவிருந்தது.

''அம்மா! அண்ணா ஏதோ பயங்கரக் கனவு கண்டிருக்கிறார் போலத் தெரிகிறது. கண்களைக் கழுவி விடுங்கள். தெளிவு ஏற்பட்டதும் என்ன என்று கேட்கலாம்'' எனக் கூறினேன்.

''சரி'' என்றார்.

அம்மாவிடம் தண்ணீர்ச் செம்பை எடுத்துக் கொடுத்தேன்.

அம்மா அண்ணனின் கண்கள் இரண்டுக்கும் தண்ணீர் அடித்து முகத்தையும் நன்றாகக் கழுவினார்.

''அம்மா எனக்கு பயமாயிக்கு. பேய் வந்தது அது எனது இரத்தத்தைக் குடிக்கப் போவதாக விரட்டியது. நான் கும்பிட்டு. கெஞ்சி என்னை ஒன்றும் செய்யாதே' என்று கேட்டேன். அதற்குப் பேய் ''முடியாது நான் உனது இரத்தத்தைக் குடித்தாற்றான் எனது பசி தீரும்'' என்று கூறியபடி என்னை நோக்கி நடந்து வந்தது.

நான்கு கோரப் பற்கள். பத்துவிரல்களில் வளர்ந்து நீண்ட நகங்கள்; பயங்கர உருவம் நான் அம்மா! அம்மா! என்று கத்தினேன். அதற்குப்பின் என்ன நடந்தது என்பதே எனக்குத் தெரியாது என்று அண்ணா கூறினார்.

''மகனே நீ கண்டது கனவு எதற்கும் பயப்படாதே, பயந்தால் எங்களோடு வந்து படு'' என்றார் அம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணனும் தனது தலையணையைத் தூக்கிக் கொண்டு எமது கட்டிலை நோக்கி வந்தார்.

தலையணையின் கீழ் ஒரு புத்தகம் கிடக்கக் கண்டேன். அதை எடுத்து நோக்கினேன். அது இரத்தம் குடிக்கும் பிசாசு என்ற தலைப்பைக் கொண்டதாகக் காணப்பட்டது.

அண்ணன் பேய்க்கதை படித்த நினைவோடு உறங்கியதை அப் போதுதான் நாம் உணர்ந்துகொண்டோம்.

* * *

# தந்தை தாய் பேண்

''தந்தை, தாய், பேண்'' என்பதும் ''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'' என்பதும் ஆன்றோர் முதுமொழிகள்.

தந்தையும் தாயும் எம்மைப் பெற்று வளர்த்த பெருந்தகைகள். அவர்களின் உதிரத்தில் இருந்தே நாம் உதயமானோம். தாய் பத்து மாதம் தன் வயிற்றில் சுமந்து குழந்தையாக பெற்றெடுக்கின்றாள். எம்மைப் பேணி வளர்க்கின்றாள். தன் உதிரத்தை பாலாக ஊட்டி நோய் கண்டவேளையில் தான் மருந்துண்டு எம்மை கண்ணிலும் மேலாகப் பேணி வளர்க்கின்றாள்.

தந்தை குடும்பத்தைப் பேண தன் உதிரத்தை வியர்வையாக்கி உழைக்கின்றார். அவர்கள் இருவரும் எமக்காக வாழ்நாளில் ஆற்றிய கடமைகள் அளவற்றவை. அதை நாம் ஒருபோதும் மறத்தலாகாது.

எம்மைப் பெற்றுப் பேணி வளர்த்த தாயும் தந்தையும் நாம் குழந்தைகளாக இருந்த வேளையிலும் தாம் திடகாத்திரமானவர் களாக தம்மைத்தாமே பேணியதுடன் எம்மையும் பேணி வளர்த் தவர்கள்.

அவர்கள் வயோதிபத்திலும், நோய்வந்தபோதும் எமது பரா மரிப்பில் வாழ வேண்டியவர்கள். தந்தையும் தாயும் தாம் பெற்ற செல்வங்களை எமது நல்வாழ்வுக்காக செலவு செய்பவர்கள். ஒரு சில பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் நல்வாழ்வுக்காக கடன் பளுவுக்காளாகி முதுமைப் பராயத்தில் துன்பப்படுவதைக் காண்கின் றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வூதியம் பெறுபவர்கள், தனவந்தர்கள், வயோதிபத்திலும், தமக்கென பொருளுடையவர்களாகக் காணப்படுகின்றனர். ஆனால் அன்றாடம் உழைத்துச் சீவித்த பல வயோதிபர்கள் வாழுவதற்கு வழி ஏதுமில்லாமல் தாங்க முடியாத வறுமையில் வாடுகின்றனர்.

பிள்ளைகள் பலர் அத்தகையவர்களின் துயரைத் துடைக்க முன் வருவதில்லை. இன்றைய சமூக வாழ்வில் சிலர், தந்தையும் தாயும் பிள்ளைக்கு இடைஞ்சல் என்ற நிலைப்பாட்டினைக் கொண்டவர்களாக வாழ்வதைக் காண்கின்றோம்.

பெற்றவர்கள் எமது இன்பத்திலும் துன்பத்திலும் துணைநின்றவர்கள். அவர்கள் மனம் வேதனை கொண்டால் எமது வாழ்வு மலராது. எனவே நாம் அவர்களைப் பேணிப் பாதுகாக்கவேண்டியது தலையாய கடமையாகும். பெற்ற பிள்ளைகள் தாய் தந்தையை மறந்து வாழுதல் ஆகாது.

* * *

# பனை மரம்

நமது நாட்டின் தமிழ்ப் பிரதேசங்களில் பனை வளம் பெருவளமாக உள்ளது. பலவகைப் பயன்பாடுகளைத் தருகின்ற பனைமரம் கற்பகத் தரு என்று அழைக்கப்படுகிறது.

நமது முன்னோர் பனம் பண்டங்களை உணவாகக் கொண்டு நீண்டகாலம் உறுதியும் பலமும் மிக்கோராக வாழ்ந்தனர். அந்நியர் நமது நாட்டுக்கு அறிமுகமாக்கிய அரிசி, கோதுமை போன்றவற்றின் வருகையினால் பனைவளத்தின் பயன்பாடுகளை மக்கள் மறந்து போகத் தொடங்கினர். இந்நிலையை மாற்றி மீண்டும் பனம்பண்டங்களை உற்பத்திசெய்து ஊக்குவிக்கும் பணிக்கென பனைவள அபிவிருத்தி நிறுவனங்கள் இன்று உருவாக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றன.

பனை வெல்லம், பாணி என்பன இன்று இங்கு அதிகளவில் உற்பத்தியாகி விற்பனையாகின்றன. பனஞ்சீனி, கல்லாக்காரம் என்பன மருந்தாகவும் உதவுவன.

ஒடியல், பனாட்டு போன்றவை நீண்டகாலம் வைத்து உண்ணக்கூடிய பண்டங்களாகும். பனம்பழம், பனங்கிழங்கு என்பனவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவைமிகு தின்பண்டங்களாக உதவுகின்றன. கருப்பநீர் மிக இனிமையானது.

பனையோலை வீடு வேயவும், வேலி அடைக்கவும், விசிறி, கைப்பை, விளையாட்டுப் பொருட்கள் செய்யவும் உதவுகின்றது. பனை ஈர்க்கு, திருகணி, உறி போன்றவை செய்ய உதவும். மட்டை வேலி அடைக்கவும், நார்க்கடகம் இழைக்கவும், கயிறாகவும், மரம் வளைகளாகவும், விறகாகவும், நிலைகளாகவும் பயன்படுகின்றது.

ஒட்டுமொத்தமாகக் கூறினால் பல்வேறு வகைகளிலும் உணவாகவும் – பொருளாகவும் – எல்லாமாகவும் பயன்படுகின்ற பனை மரம் நம் ஒவ்வொருவராலும் பேணி வளர்க்கப்படவேண்டிய ஒன்றாகும்.

எனவே நாமும் வீட்டுக்குவீடு பனம் விதை நட்டு நாடும் வீடும் வளம் பெறச் செய்வோம்

❋ ❋ ❋

# தெருவில் கிடந்த பணப் பை

காலை எட்டு மணி. தெருவில் அங்குமிங்குமாக சனக்கூட்டம் நடமாடிக் கொண்டிருந்தது. அவர்களில் ஒருவனாக நானும் நடந்து பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்தேன்.

ஒரு சிறிய சந்தியில் எனது நண்பன் பாலனது வரவை எதிர்பார்த்து நிற்கவேண்டியிருந்தது. நான் நின்ற இடத்துக்கும் பாலனது தெருப்படலைக்கும் இடைத்தூரம் ஐம்பது மீற்றர் இருக்கும். கிழக்குத் திசையில் இருந்து ஒரு மோட்டார் சைக்கிளில் இருவர் மிக வேகமாக வந்துகொண்டிருந்தனர். நான் நின்றுகொண்டிருந்த இடத்தை அவர்கள் நொடிப்பொழுதில் கடந்துசென்றனர்.

அவர்களது வண்டி நான் நின்ற இடத்தைக் கடக்கும்பொழுது அவர்கள் கொண்டு சென்ற பையொன்று தவறி விழுந்ததைக் கூட அவர்கள் அவதானிக்காமல் சென்றுவிட்டனர் தெருவால் சென்றுகொண்டிருந்தவர்கள்கூட பை விழுந்ததை அவதானிக்கவில்லை நான் ஒரே இடத்தில் நின்றுகொண்டிருந்தமையால் ஒடுகுவேலியோரத்தில் விழுந்த பையைக் காணக்கூடியதாகவிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பையை எடுத்துப் பார்க்க விரும்பினேன். ஆனால் தெருவில் கிடக்கும் பையை எடுத்தால் எனக்கு ஏதாவது ஆபத்து வருமோ எனப் பயந்து நின்றேன்.

பாலனும் வந்து சேர்ந்தான். அவனுக்கு நடந்தவற்றைக் கூறி பையைக் காட்டினேன்.

அவன் ஒரு நீளத் தடியை எடுத்துப் பையை பலமுறை தட்டிப் பார்த்தான். அந்தப் பைக்குள் கடதாசிச் சாமான் இருக்கிறது. கையால் எடுப்பதில் எந்தவித ஆபத்துமில்லை எனக் கூறினான்.

நான் பையை மெல்ல எடுத்தேன். காசு நிரம்ப இருப்பதாக உணர்ந்தேன். அந்தப் பையைத் திறந்து பார்க்க விரும்பாத நாம் பையுடன் பாடசாலைக்குச் சென்றோம்.

பையை பாடசாலை அதிபரின் அறைக்குள் கொண்டு சென்று அவரிடம் ஒப்படைத்தோம். தெருவில் பை எவ்வாறு கிடைத்தது என் பதையும் கூறினோம். அவர் பொறுப்பேற்றுக்கொண்டு எமது நற் செயலையும் பாராட்டினார்.

பத்து மணியிருக்கும், சந்தியில் என்னைக் கடந்து சென்ற இரு வரும் அதே மோட்டார் சைக்கிளில் பாடசாலையை நோக்கி வருவதைக் கண்டேன். வந்தவர்கள் அதிபரின் அறைக்குள் சென் றனர்.

சில நிமிட நேரமாக அதிபருடன் உரையாடினர். அதிபர் ஒரு மாணவனை அனுப்பி பாலனையும் என்னையும் தனது அறைக்குக் கூப்பிட்டார்.

அங்கு இருந்த இருவருக்கும் எங்களைச் சுட்டிக் காட்டி ''இவர்கள் இருவரும்தான் இந்தப் பணப்பையை இங்கு கொண்டு வந்து என்னிடம் தந்தவர்கள்'' என்று கூறினார்.

அவர்கள் இருவரும் ''நீங்கள் இருவரும் உண்மையுள்ளவர்கள்; நல்ல வீட்டுப் பிள்ளைகள்'' எனப் பாராட்டிப் புகழ்ந்தனர்.

தமது சட்டைப் பைக்குள் இருந்து ஐயாயிரம் ரூபாவை எடுத்து அதிபரிடம் கொடுத்து பாடசாலைக்கு விளையாட்டுப் பொருட்களை பரிசாக வாங்கிக்கொடுக்கும்படி கூறினார்கள்.

''பிள்ளைகளே நீங்கள் இரண்டு இலட்சம் ரூபாவை எமக்கு மீட்டுத்தந்தீர்கள். உங்களுக்கு எங்கள் நன்றி'' என்று கூறி தமது பணப் பையை அதிபரிடம் பெற்றுக்கொண்டு சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26-2-94 வீரகேசரியிலிருந்து

தமிழ்ப் புலமையில் கட்டுரை எழுதுதல் என்பது எல்லோருக்கும் கைவந்த கலையாகிவிடாது. மாணவ சமுதாயத்தில் கட்டுரை ஆக்கும் திறனை வளர்ப்பதற்கு ஆசிரியர்கள் பலவழிகளிலும் முயன்று வரும் போதிலும். வாசித்தல் திறன் ஓரளவிற்கு உள்ள மாணவர்களுக்கே கட்டுரை எழுதும் திறன் வாய்க்கப்பெறுகிறது.

வாசித்தல் திறனை அதிகரிக்க மாணவர்களுக்கு உரியவகையில் புத்தகங்களைக் கொடுக்கவேண்டிய ஒரு கடப்பாடும் அவர்களை வழிப்படுத்துபவர்களுக்கு உண்டு. அத்தகைய புத்தகங்களை வெளிக்கொணர்வது இன்றைய யாழ்ப்பாண நிலைப்பாட்டில் மிகவும் இலகுவான காரியம் அல்ல.

இருந்தும் மாணவ நலன்களில் அக்கறை கொண்டும் தமது ஆக்கத்திறனை வெளிப்படுத்தவும் ஒரு சிலர் பகிரதப்பிரயத்தனம் செய்து புத்தகம் வெளியிட்டுக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் வரிசையில் ''பழமொழிச் செல்வர்'' சச்சி மாஸ்ரர் குறிப்பிடத் தக்கவர்.

அவர் வெளியிட்டுள்ள மாணவர் கட்டுரை மலர் 37 கட்டுரைகளைக் கொண்டமைந்த ஓர் நூல்.

இதில் உள்ள கட்டுரைகள் மாணவர்களின் சிந்தனைத்திறன், அறிவுக் கொள்ளளவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு எழுதப்பட்டுள்ளது. நூலின் முகப்பில் ஆசிரியரே 5ஆம் ஆண்டு புலமைப் பரிசிற் பரீட்சை மாணவர்களுக்கும் 6ஆம் 7ஆம் ஆண்டு மாணவர்களுக்கும் ஏற்றது என்று குறித்துச் சொல்கிறார். எனினும் சில கட்டுரைகள் 6ஆம், 7ஆம் தரத்திற்கு மேற்பட்டதாக உள்ளன.

இக்கட்டுரை மலரைப் படிப்பதன் மூலம் மாணவர்களின் கட்டுரை ஆக்கும் திறன் வளரும் என்பதில் ஐயமில்லை. எந்த வழிகாட்டல் இன்றியும் தாங்களாகவே வாசித்து விளங்கிக் கொள்ளக்கூடியளவில் அமைந்துள்ளமையே அதற்குக் காரணமாகும். மேலும் இத்தகைய புத்தகங்கள் வெளிவரவேண்டும் என்பதும், அவற்றை மாணவர் பயன்படுத்த வேண்டும் என்பதும் உணரப்பட வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org